தென்மொழி



பிரிவினைக்கு வழிவகுப்போம் !

புரிவினைகள் அத்தனைக்கும் புரைவடவர்
தம்மிசைவைப் போய்ப்போய்க் கேட்டுப்
பரிவினுக்குக் காத்திருக்கும் படி, என்ன
வந்ததிங்கே? பணங்கா சுக்கே
நரிவினையைச் செய்திடுவார் நயந்துவரார்;
நறுந்தமிழாக் குரிமை வேண்டிப்
பிரிவினைக்கு வழிவகுப்போம்; பிறவினைகள்
பிறகென்போம்! பிளிறு வோமே!

சுவடி: ௧. ஓலை: ௧. இரட்டை (ஆனி) ௧௯௯௮.

தனித்தமிழ்
இலக்கியத்
திங்களிதழ்

வந்த மடல்கள் :

○ தமிழ்நலங் கனிந்த ஐயா !

பெரியார் பற்றித் தாங்கள் எழுதிய கருத்துகள் என் உள்ளத்தைக் கவர்ந்தன. இதுபோன்று நடுநின்று பெரியார் பற்றி எவர் எழுதிய கருத்துகளையும் இதுவரை நான் படித்ததில்லை. இதனைப் பெரியாரே ஒருமுறை படித்தால் திருந்தி விடுவார் என்பது என் முழு நம்பிக்கை. ஆரியர்கள் 'சூத்திரமொழி' என்று நம் மொழியைக் கூறுவதற்கும், பெரியார் 'காட்டுமிராண்டிமொழி' என்று கூறுவதற்கும், வேறுபாடே இல்லையெனலாம். தாங்கள் எழுதியவற்றுள் நான் தங்களோடு முரண் படும் ஓரிடத்தைத் தங்களுக்குப் பணிவன்புடன் முன் வைக்கின்றேன். கம்பராமாயணம், பெரிய புராணம், வில்லிபாரதம் ஆகியவை ஆரிய அடிமைப் புலவர்களால் ஆக்கப்பட்டவை என்ற கருத்தினைத் தெரிவித் துள்ளீர்கள். கம்பராமாயணமும் வில்லிபாரதமும் ஆரிய நாட்டுக் கதைகளைப் பின்பற்றி எழுந்த நூல்களே! ஆனால் 'திருத்தொண்டர் புராணம்' (பெரியபுராணம்) அவ்வாறு எழுதப்பட்டதன்று. தமிழ் மண்ணில் பிறந்து தமிழ்மண்ணில் வாழ்ந்து த மி ழ ர் க ள ா க வே மறைந்த பெருமக்களின் வரலாறு அது. சோழ நாட்டின் முதலமைச்ச ராயிருந்த சேக்கிழார் ஆரிய அடிமைப் புலவரல்லர். பெரிய புராணம் பார்ப்பன அடிமைப் பழங்கதை நூல் அன்று. எனவே தாங்கள் சேக் கிழாரைப் பற்றியும் அவர் பாடிய பெரிய புராணத்தைப் பற்றியும் கொண்டுள்ள கருத்துகளை மாற்றிக்கொள்ள வேண்டுமென்பது என் வேண்டுகோள். தங்கள் வாழ்நாள் வளரத் தில்லைக் கூத்தனைப் பணி கின்றேன். 'வரப்புயர நீருயரும்' என்பதுபோலத் தங்கள் வாழ்நாள் வளரத் தமிழும் வளரும் என்பது என் வாழ்த்து.

—புலவர். சி. சத்தியமூர்த்தி, கீ. க. தே. (B.O.L.) அண்ணாமலை நகர்.

○ முத்தமிழ்த்துறையின் முறைபோகிய ஆசிரியர்க்கு. வணக்கம்

தென்மொழியைத் தொடர்ந்து படித்து வருவோரின் யானும் ஒரு வன். புறநானூற்றுக்காலப் புலவர் போன்றே யார்க்கும் அஞ்சாமல் உண்மையை உரைக்கும் தங்கள் பெற்றியைத் தென்மொழியின் வழி யாகவும் தங்கள் சொற்பொழிவு வழியாகவும் யானறிந்து வியந்துள் ளேன். நறுமணம் கமழ்ந்து வரும் தென்மொழி சில திங்கள்களாக அரசியல் முடை நாற்றத்தைச் சுமந்துவந்து மூக்கைத் துளைப்பதை என் நண்பர்கள் என்னிடம் கூறியுள்ளார்கள். யானும் உணர்ந்துள் ளேன். தமிழ்த்தாய்க்கு எப்படி இருக்குமோ ? ... ...ஆகவே தூற்றுவதைத் தொழிலாகக் கொள்ளாமல், குற்றங் கடிவதைத் தொழி லாகக் கொள்ளுங்கள் இப்பொழுதுள்ள அரசு நிறைய நடவடிக்கை களைத் தமிழாக்கப் போகிறது. ஓர் அன்பர் எழுதியுள்ளபடி அவை

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப் பக்கம்)

தென்மொழி

இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே

சுவடி-5 :: ஓலை-5

இரட்டை (ஆனி) தி. பி. ௧௯௯௮ (1967–சூன்)

பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்

உறுப்பாசிரியர்:– தங்கப்பா

தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1

பிரிவினை நோக்கித் தள்ளப் படுகிறோம்!

"சீனம் மீண்டும் புகைந்து கொண்டுள்ளது; பாக்கித்தான் மறுபடியும் குமுறிக் கொண்டுள்ளது" என்று செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றைத் தொடர்ந்து இனி இந்திய அரசின் எச்சரிக்கைகள் ஒன்றன் பின் ஒன்றாக வெளிவந்து கொண்டிருக்கும். எச்சரிக்கைகளைத் தொடர்ந்து மீண்டும் பல புதிய சட்டங்கள் இந்திய ஒருமைப்பாட்டை

வலுவுடையதாக்கும்; கைவிடப்பட்ட பழையசட்டங்கள் மீண்டும் புதுப்பிக்கப் பெற்று நடைமுறைக்கு வரும். இவற்றிற்கிடையில் ''மக்கள் பசி, பஞ்சத்தையும், பிற சிக்கல்களையும் பாராது, இந்திய நாட்டு ஒருமைப்பாட்டில் நம்பிக்கை வைக்க வேண்டும்'' என்பது போன்ற வேண்டுகோள்கள் இங்குள்ள அமைச்சர்கள், தலைவர்கள், தொண்டர்கள் என்பவர்களின் வாய்களிலிருந்து அன்றாடம் வெளிவந்து கொண்டே இருக்கும். இப்படிப் பல மாதங்கள் வரலாற்றில் கழியும். மீண்டும் அமைதி; அதைத் தொடர்ந்து சலசலப்பு; என்றபடி இந்திய அரசியல் நாடகம் நடத்தப் பெற்று, அதில் ஒருமைப்பாட்டு நாட்டியம் ஆடப்பெற்று வருகின்றது. இந் நாடகத்திற்குள் நாடகமெனப் பீகார் உணவுப் பஞ்சம், மராட்டியத்தில் உள்ள சிவசேனை இயக்கம், அப்துல்லாவின் விடுதலை வேட்கை, சீக்கியரின் தனி நாட்டுக் கோரிக்கை, நாகர்களின் புரட்சிப்போராட்டம், காசுமீரத்தின் அவிழ்க்க முடியாத சிக்கல், வங்காளிகளின் உள்நாட்டு எழுச்சி, இந்திய - இலங்கை ஏதிலிகளின் பரிமாற்றம், பருமிய - இந்தியரின் உடைமைப் போராட்டம் இன்னோரன்ன பற்பல துணைக் காட்சிகள், இக் காட்சிகளுக்கிடையிடையே தொங்க விடப்பெறும் திரைச் சீலைகளின் உள்ளிருந்து கொண்டு முழக்கப் பெறும் தேசிய இசை. இந்தி விளம்பரம், ஒருமைப் பாட்டின் பின் பாட்டு! இதுதான் இந்திய அரசியல்!

மூக்கு உள்ளவரை சளியும் போகாதது போல், இந்தியா உள்ளவரை அதன் வடகிழக்கு எல்லையில் பரந்து விரிந்துகிடக்கும் சீனவும், அதன் வடமேற்கு எல்லையில் இணைந்து கிடக்கும் பாக்கித்தானும் அவற்றின் சலசலப்புகளும், முரமுரப்புகளும் என்றைக்கும் போகா. இவ்வார்ப்பாட்டங்கள் உள்ளவரை இந்திய அரசியல் நாடகத்தில் என்றைக்கும் ஒரே கதைதான்! கதையின் வழக்கமான காட்சிகள்தாம்! காட்சிகளுக்கிடை இடையே ஒரே பின்பாட்டுத்தான். எவருக்கும் இதில் எள்ளளவும் ஐயப்பாடு வேண்டா. வேண்டுமானல் பேச்சுக்காகக் கொஞ்சகாலம் நிகரமைக் கொள்கையைப் பேசலாம்; சிறிது காலம் பொதுவுடைமைக் கொள்கைக்குத் துணை நிற்கலாம்; சிலகாலம் பேராயக்கட்சி அரசேற்கலாம்; சிலகாலம் பிறகட்சிகள் ஆட்சி செய்யலாம்; ஆனல் இம்மாற்றங்களெல்லாம் நாடக நடிகையர், இசைக் குழுவினர் மாற்றங்கள் போல் நாடகக் கதைக்கும் காட்சிகளுக்கும் புறம்பானவையாகவே இருக்கும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

இந்தியாவின் இத்தகைய் குழப்பங்கள் இந்திய மக்களையே மூச்சுத் திணர வைத்துக் கொண்டுள்ளன. இனி இவற்றைவிட இந்தியாவின் உள்ளீரலையே பற்றிக் கொண்டிருக்கும் நோய்கள் பல: அவை இங்குள்ள குல, சமய வேறுபாடுகள், தென்னாட்டு, வடநாட்டுப் பார்ப்பனரின் உள்ளரிப்புகள், அவற்றின் அடியாக எழுந்த மூடநம்பிக்கைகள் முதலியவை. இவற்றைப் பற்றிய சிக்கலைத் தீர்ப்பதற்கு எந்த உலக ஒன்றிப்பும் முன்வராது, இச் சிக்கல்களுக்குள் அறிந்தோ அறியாமலோ மாட்டிக் கொண்டிருக்கும் கட்சி பேராயக் கட்சி. வாகாகக் கிடைத்த இக் கட்சியின் சிணுக்கு நுனிகளைக் கைகளில் பிடித்துச் சில பணக்கார முதலைகளும், சமயத் தலைவர்களும் எந்த அளவுக்கு இந்தச் சிணுக்குகளை அவிழ்த்து நூல்களை உருவிக் கொள்ள முடியுமோ, அந்த அளவில் உருவிக் கொண்டிருக்கும் தவிர்க்க முடியாத ஒரு தந்திரப் போக்கு, உலக அரசியல், பொருளியல் அறிஞர்களுக்கே விளங்காத ஒரு புதிர். இவற்றிற்கெல்லாம் ஓர் அடிப்படைக் காரணம் உண்டு. அதுதான் இந்நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டம். இந்தச் சட்டத்தையே வங்காள விரிகுடாவிலோ குமரிமாக்கடலிலோ கொண்டுபோய் வீசியெறிந்து விட்டுப், புத்தம் புதிய சட்டங்களைப் புத்தம் புதிய மூளைகளைக் கொண்டு செய்வித்தால் ஒழிய, இந்தியாவின் அரசியல் நாற்றத்தைப் பனிமலையளவு சவர்க்காரம் கொண்டு, பசிபிக் மாக்கடல் அளவு தண்ணீர் விட்டுக் கழுவினாலும் தீர்த்துவிட முடியாது. ஏனென்றால் இந்தச் சட்டத்தை அமைத்தவர்கள் அறுவர். அதில் நால்வர் பார்ப்பனர்; ஒருவர் தாழ்த்தப்பட்டவர்; ஒருவர் முசுலிம். அறுவரில் நால்வரால் ஒப்புக் கொள்ளப் பெற்ற சட்ட அமைப்புகளே இவ்விந்திய வரலாற்றையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றன. ஏனென்றால் அவர்களால் ஒப்புக் கொள்ளப் பெற்ற சட்ட அமைப்புகளின் இன்றியமையாத தந்திரச் சொற்களெல்லாம் பழங்கதைப் புளுகர்களான மநு, சாணக்கியர் முதலியோர் எழுதிய குலவேறுபாட்டுக் கொள்கை என்ற குட்டையில் ஊறிக் கிடந்த மட்டைகளே! எனவேதான் "இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உள்ளவரை, இங்குக் குமுகாய உரிமைக்கு வழியில்லை; வழங்கப்பட்ட உரிமைகளும் குல, சமய அடிப்படையில் தான் வழங்கப்பட்டுள்ளன; இவை இருக்கும்வரை இங்குள்ள மக்களுக்குள் உள்ள ஏற்றத் தாழ்வுகளும், அரசியல் போராட்டங்களும் இருந்தபடியேதான் இருக்கும். நாமும் அவற்றிற்காகப் போராடிப்

போராடி இறந்தபடியேதான் இருப்போம். இவ்விரண்டு நிலைகளுக்கும் உட்பட்டு நாம் செத்துக் கொண்டிருக்கும் இப் போராட்டமே நமக்கு வாழ்க்கையாக இருக்கும்"— என்று சொல்கின்றோம். எண்ணிப் பார்ப்பவர்களுக்கு நாம் கூறுகின்ற இக் கருத்து எத்துணையளவு உண்மையானது என்று புரியாமல் போகாது. தெளிவாக விளங்கும். விளங்கிக் கொள்ளாதது அவர்களின் பின் தங்கிய நிலையைப் பொறுத்தது ஆகும்.

மேற்கண்ட வகையில் பெருத்த சிக்கலுக் குட்பட்டதான இந்திய அரசியல் அமைப்பில் நம் தாய்நிலமாகிய தமிழகம் ஆட்பட்டுத் தவிப்பது நம்போன்ற நெஞ்சினர்க்கு எத்துணைக் கவலை தருவதாக உள்ளது! இப்பொழுதுள்ள சூழ்நிலையில்—இந்தியா ஒன்றாக இருக்கும்வரை. பேராயக்கட்சிதான் பெரும்பான்மைக் கட்சியாக விளங்கும். அது பெரும்பான்மை பெறுகிறவரை வடநாட்டினர்தாம் இந்திய அரசியலை ஆட்டிப் படைத்துக் கொண்டு இருப்பர். தென்னாட்டுக் காமராசரின் கை தென்னக அரசியல் பிடியை நெகிழ விட்டு விட்டதால், இனி அவரின் வடநாட்டுப் பிடிப்பையும் தளர்த்தி விடுவதற்கு வடவர்கள் உறுதிபூண்டு விட்டனர். அவர் ஒருவராகிலும் தென்னாட்டவர்க்கு—குறிப்பாகத் தமிழர்க்குத் தீங்குதரும் வாடைக்காற்றுக்குத் தடுப்புச் சுவராக இருந்து வந்தார். அவரையும் இடித்துத் தள்ளிவிட வேண்டிய ஒரு கட்டாய நிலை இப்பொழுது வடநாட்டு அரசியல் தலைவர்களிடையே ஏற்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இவர்வழி நின்ற அரசியல் தொடுப்பு நீக்கப்படுமானால், பேராயக்கட்சி இங்குள்ள ஓரிரு நாத்தடிப் புக்காரர்களின் வாய்க்கு வரகரசியாக இருக்குமேதவிர, தமிழர்களின் உரிமை பறிபோகாமல் காக்கும் கைக்கேடயமாக இருக்காது என்பதை அழுத்தந் திருத்தமாக நம்பலாம்.

மேலும் இந்தியாவில் பேராயக்கட்சி ஆட்சியில் உள்ளவரை மொழிச்சிக்கலை—இந்திச்சிக்கலை—அது தீர்க்காது; தீர்க்க விரும்பாது. இந்திச் சிக்கல் உள்ளவரை பிறதேசிய மொழிகளின் வளர்ச்சிக்கு முகாமை காட்டப்பெறாது. பேராயக்கட்சி பெரும்பாலும் வடவரின் கைக் கோடரியாகவே இருக்கின்ற காரணத்தால், இந்திய அரசியல் அதிகாரங்கள் முற்றும் தில்லியிலேயே குவிக்கப்பட்டுக் கிடக்கும். அவற்றைப் பரவலாக்க வடவர் ஒருபோதும் இசையார். அதுவரை தமிழகத்தில் ஏற்படும் சிறுசிறு சிக்கல்களுக்கெல்லாம் (தமிழகப்பெயர்

மாற்றம்; ஆகாசவாணி பெயர் நீக்கம் போன்றவற்றிற்கு)கூட, 2000 கற்களுக்கு அப்பாலுள்ள தில்லிக்குப்போய்த்தான் முடிவுகாண வேண்டும். நம் தமிழக அமைச்சர்களும் உறுப்பினர்களும் எவ்வளவு பாடு பட்டாலும் நம் அரசியல் உரிமையை ஓர் அணுவளவுகூடத் தம் விருப்பப்படி பயன்படுத்திக் கொள்ள முடியாமல் இருப்பர். இவற்றைப் பற்றியெல்லாம் அரசியல் சட்டம் மிகத் தெளிவாகவும், முன்னெச்சரிக்கையாகவும் எழுதிவைக்கப்பெற்றுள்ளது. "எந்த ஒரு மாநிலத்திலிருந்தும் அதன் பகுதிகளைப் பிரித்தோ, பிற மாநிலப் பகுதிகளுடன் இணைத்தோ, பல மாநிலங்களை ஒன்றாக இணைத்தோ ஒரு மாநில அமைப்பைப் புதியதாக்கலாம். ஒரு மாநிலத்தின் பரப்பைக் குறைக்கவோ, கூட்டவோ, அதன் எல்லைகளை மாற்றவோ, பெயரை மாற்றவோ, செய்யலாம். இந்த மாற்றங்களைக் குடியரசுத் தலைவர் தம் இசைவுடன் கூடிய சட்ட மன்றத் தீர்மானத்தின்படி பாராளுமன்றம் செய்யலாம்" என்பது அரசியல் சட்டம்.

இந்நிலையில் அவர்கள் 'காசி'யை 'வாரணாசி'யாக மாற்ற விரும்புவார்களே தவிர, 'மெட்ரா'சைத் 'தமிழக'மாக்க விரும்பார். இதுபற்றி அவர்கள் முன்பே எண்ணி முடிவுகட்டிக் கொண்டுள்ளனர். இந்தியாவில் உள்ள பிற வடமாநிலங்களின் பெயர்களையெல்லாம் (காசுமிரி–காசுமிரம்; பஞ்சாபி–பஞ்சாப்; வங்காளி–வங்காளம்; ஒரியா–ஒரிசா பீகாரி–பீகார்; குசராத்தி–குசராத்; மராத்தி–மகாராட்டிரம் என) மொழியடிப்படையில் பெயர் வைத்தவர்கள் தென் மாநிலங்களான தெலுங்கு வழங்கும் மாநிலத்தை ஆந்திரம் என்றும்; மலையாளம் வழங்கும் மாநிலத்தைக் கேரளம் என்றும்; கன்னடம் வழங்கும் மாநிலத்தை மைசூர் என்றும்; தமிழ்வழங்கும் மாநிலத்தை மெட்ராசு என்றும் வைக்கின்ற பொழுதே தென்னாட்டினர்க்கு மொழியுணர்வும் இனவுணர்வும் ஏற்பட்டுவிடக் கூடாதென்று கருத்துக் கொண்டிருக்கின்றனர் என்று தெரிகின்றது இல்லையா? இப்படிப்பட்ட மொழியுணர்வு ஏற்படக்கூடாதென்று கருதிக்கொண்டதற்குக் காரணம் பிராமணீயமே! பொதுவாகப் பார்ப்பனர் இந்தியா முழுமையும் பரவியுள்ளனர் என்றாலும், அவர்களின் மிகுந்த வலிமை தென்னகத்திலேயே ஊடுருவி நிற்கின்றது. தென்னகத் திராவிடக் குடும்பத்தில், அவர்களின் வல்லாண்மை மொழியளவிலும், இன அளவிலும் இரண்டறக் கலந்து நிற்கின்றது. திரவிட மொழிகளான மலையாளம், தெலுங்கு, கன்னடம்

முதலியவற்றிலிருந்து சமசுக்கிருதம் முற்றும் நீக்கப்படுமானுல் அவற்றின் எஞ்சிய பகுதிகளெல்லாம் தமிழ் மொழியாக ஒளிவிடுவதை எவரும் மறுத்தோ, தடுத்தோ விடமுடியாது. எனவேதான் தென்னகத்தார்க்கு மொழியுணர்வு ஏற்பட்டுவிடக் கூடாதென்ற எண்ணம் வடவர்களேவிடப் பிராமணர்களுக்கு மிக ஆழமாகப் பதிந்து கருவளவில் பொதிந்து நிற்கின்றது. இந்நிலையில் திரவிட மாநிலங்கள் எவற்றையும் மொழிப் பெயரிட்டுக் கூறுவதை எந்தப்பிராமணனும், வடவனும் ஒப்புக்கொள்ளான். அதற்கான சட்ட அமைப்புகளையும் அவர்கள் கைகளில் வைத்துக் கொண்டுள்ளனர் என்பதை எல்லாரும் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

மேலும் அரசியல் அமைப்பு போன்றே இந்தியாவின் குமுகாய அமைப்பும் சிக்கல் வாய்ந்ததாகவே உள்ளது. எவரும் எந்தக் காலத்தும் இங்குள்ள வேறுபாடுகளையும், சமயப் பூசல்களையும் வேரறுத்து விடாதபடி சட்டத்தில் காப்புச்செய்யப்பட்டுப் பூட்டிடப் பெற்றுள்ளது. சமயச் சார்பற்ற அரசு என்று சொல்லளவில் கூறப்படுகின்றதேதவிர, "சட்ட அமைப்பில் அந்தப்படியான ஒரு சொல் எந்த ஒரு வரியிலும் எழுதப்படவில்லை" என்று திரு. சி. பி. இராமசாமி உட்பட்ட பெருந்தலைப் பிராமணர்களே உரைத்துப் பெருமிதப்பட்டுப் போயிருக்கின்றனர். இதன் உட்பொருள் என்னவெனின், இந்தியாவிலிருக்கும் வரை இந்துச் சமயமும் இருக்கும் என்பதே! இந்துச் சமயம் இருக்கும்வரை இங்குள்ளவர் இனம் இனங்களாகவும், குலங்குலங்களாகவுமே பாகுபட்டுக் கிடப்பர் என்பது உறுதி. தமிழரும் அப் பாகுபாட்டில் என்றும் நாலாந்தர அடிமைகளாகவே கிடப்பர் என்பதும் அழிக்கமுடியாத உறுதி. இந் நிலையில் குமுகாயத் துறையிலும் தமிழர் என்றென்றும் தம் உரிமைகளை இழந்தபடியே இருப்பர் என்பது தெரிவாகின்றது. பொருளியல் அளவில் தமிழகமும் பிற மாநிலங்களும் நடுவணரசின் அடிமையாகவே இருக்கும் என்பதை, அண்மையில் தமிழக முதலமைச்சர் திரு. அண்ணுத்துரை அவர்களுக்கு வட்டி நீக்கம் பற்றியும் அரிசியிழப்பு ஈட்டுத்தொகை பற்றியும் திரு. மொரார்சி தேசாய் விடுத்த விடையிலிருந்து நன்ருக விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறு அரசியல், பொருளியல், குமுகாயவியல், மொழி, பண்பாடு முதலிய அத்தனைத் துறைகளிலும் தமிழகம் தாழ்த்தப்பட்டுக் கிடக்கின்றதை எந்தக் கட்சி உண்மைத் தலைவரும் ஒப்புக்கொள்ளாமல்

இருக்கமுடியாது. இச்சூழ் நிலையில் இந்திய அரசினரின் ஒருமைப் பாட்டு அமைப்பு மராட்டியரின் 'சிவசேனை' இயக்கத்தாலும், வங்காளி யரின் மொழியெழுச்சியாலும், நாகர்களின் விடுதலை வேட்கையாலும் அப்துல்லாவின் தளராத தன்னம்பிக்கையாலும் சிதறியடிக்கப்பட்டு வருகின்றது. இன்னும், "பலகோடி உருபாக்கள் இழப்பானாலும் இந்தி மொழியை நுழைத்தே தீருவோம்" என்று கொக்கரிக்கும் சேத் கோவிந்ததாசு போன்றாரின் வெறிக் கொள்கையும் தென்னவர்க்கு அமைதியும் ஆறுதலும் தருவதாக இல்லை. என்றும் வாய் வாளாத அரசியல் அடிமைகளாகத் தமிழர் கிடப்பதைவிட உரிமைப் போரிட்டுச் செத்துத் தொலைப்பதே மேல் என்று படுகின்றது. வடநாட்டினின்றும், வெளி நாடுகளினின்றும் தமிழ் இனம் துரத்தியடிக்கப் படுகின்ற நிலை யில், தமிழனின் இருக்கின்ற கையளவு புகலிடமும் பறிக்கப்பட்டு விடுமோ என்று அஞ்சவேண்டி உள்ளது. இந்தியக் கூட்டாட்சியால் தமிழனுக்குக் கிடைக்கின்ற ஊதியத்தைவிட மிகுதியாக இழக்க வேண்டியுள்ளது. அவன் இழந்த, இழக்கின்ற அரசியல் பொருளியல் குமுகாய உரிமைகளுடன், அவனின் மூலப் பொருள்களான தன்மான மும் பண்பாடும் வேறு பறி போகின்றன. தமிழன் தான் இறப்பக் கொடுத்த வரலாறு ஏராளம்; ஈந்து ஈந்து அவன் தன் சிறப்பையே கெடுத்துக்கொண்டான்; அறவாழ்வையே ஏளனமாக்கி விட்டது தமிழ னின் தன்மான இழப்பு! அவன் இனியும் ஏமாளியாக இருக்க விரும்ப வில்லை. 'சிவசேனை' போன்ற இயக்கத்திற்குத் 'தமிழ்ப்படை' எவ் வகையிலும் தாழ்ந்ததன்று. மராட்டியத்தில் இருக்கும் தென்னாட்ட வரை-தமிழரைவிட இங்குள்ள வடவர்கள் வலிந்தவர்களும் அல்லர். பொதிய வெற்பில் பொடியாக்கப்படும் அவர்தம் எலும்புகள், கன்னி மணலில் புதைக்கப்படுவது தமிழர்களின் மறுமலர்ச்சி வாழ்வின் தொடக்கமாக அமைவது பெருமைதரக் கூடியதே! தமிழன் தன்னை உணர்த்தக் காலம் வந்துள்ளது; நெடிதயர்ந்த மடித்துயில் களைந்து, தமிழன் தெளிவடைந்து எழுந்துள்ளான். எழுந்ததும் தமிழக விடுத லைக் குரல் அவன் செவிகளில் படுகின்றது. பிரிவினை நோக்கி அவன் தள்ளப்படுகிறான். இடப்படும் ஆணைக்குக் காத்துக் கிடக்கும் இளைஞர் பட்டாளம் ஆட்சியினர்க்கு எச்சரிக்கை கொடுத்துப் புறப்படுகின்றது. வெற்றியை நோக்கி நடையிடட்டும் அதன் முனைப்பு!

— பெருஞ்சித்திரன்.

விடுதலை வேட்கை !

பாவேந்தர் பாரதிதாசன்.

கருவிழி ஓடி உலகொடு பேசி
எனதிட மீளும் அழகோனே
கழைநிகர் காதல் உழவினில் ஆன
கதிர்மணி யே, என் இளையோய்நீ,

பெரியவ னாகி எளியவர் வாழ்வு
பெருகிடு மாறு புரியாயோ
பிறர்நலம் நாடி ஒழுகினை யாக
இருசெவி வீழ மகிழேனோ

தெரிவன யாவும் உயர்தமி ழாக
வருவது கோரி உழையாயோ
செறிதமிழ் நாடு திகழ்வது பாரீர்
எனஎனை நீயும் அழையாயோ

ஒருதமி ழேநம் உயிரென யாரும்
உணர்வுறு மாறு புரியாயோ
உயர்தமிழ் நாடு விடுதலை வாழ்வு
பெறஉன தாவல் பெருகாதோ!

பேராசிரியர் மறைவு !

சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்த்துறைத் துணைத் தலைவர் பண்டாரகர் திரு. மா. இராசமாணிக்கனார் அவர்கள் அண்மையில் காலஞ் சென்றமை பற்றிப் பெரிதும் வருந்துகின்றோம்.

உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராகவும், பின் தமிழாசிரியராகவும், கல்லூரியில் விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் துணைத்தலைவராகவும் தொடர்ந்து தமிழ்ப் பணியாற்றிய அவர் நூற்றுக்கணக்கான நூல்களை எழுதியுள்ளார். அவர் தம் பல்லவர் வரலாறு, திருத்தொண்டர் வரலாற்று நூலாராய்ச்சி முதலிய நூல்கள் ஆராய்ச்சியாளரால் பெரிதும் பாராட்டப் பெறுவனவாம். வரலாற்றுத் துறையில் செவ்விய ஈடுபாடும் திறனும் உடைய பண்டாரகர் அவர்கள் தம் இறுதிக் காலம் வரை அமைதியாகச் செய்த தமிழ்ப்பணி தமிழ் உள்ளங் கொண்டார் எல்லாராலும் பாராட்டற் பாலதாகும்.

அவரைப் பிரிந்து வருந்தும் அவர் குடும்பத்தார்க்கும் தமிழ் அன்பர்க்கும் எங்கள் நெஞ்சுகசிந்த ஆறுதல்கள் உரியவாகுக !(ஆர்.)

இலக்கியம்

நூறாசிரியம்

துரை - மாணிக்கம்

பாட்டு: ௧.

குன்றம் பொடித்துக் குரைகடல் பாய்ச்சி
எந்திரக் கொழுவி னிராப்பகல் உழுது
வான வூர்தி மேனிலை நின்றே
அளப்பற வித்தி வளப்புற விளையினும்
கொளப்பெறு மளவொரு கையே; கொள்வதும்
உணப்பெறு மளவொரு வாயே; உண்பதும்
ஒருபொழு தளவொரு வயிறே; ஒருநாள்
இருபொழு தளவே! இருப்பதன் வரையே!
எஞ்சிய தின்னவர்க் கிவ்வள வெனுமுன்
துஞ்சிய ரெவருந் தோன்றிலா தாரே!
இருக்குநா ளிருக்க ஈகுக
பெருக்க முற்றவர் சுருக்கமுற் றூர்க்கே!

பாட்டு: ௧. பொழிப்பு:

குன்று போலும் மண்மேடுகளைப் பொடித்து நிரவி நிலமட்டமாக்கி ஒலிக்கின்ற கடல்நீரைப்பாய்ச்சிக் குழைத்துச் சேறாக்கி, விசைப் பொறி யமைந்த கொழுபூட்டிய ஏரினால் இரவு பகல் ஓயாமல் உழுது கழனியாக்கிப் பரப்பும், இயலாமையும் கருதி வானவூர்தியின் மேல்

நின்று அளவில்லாமல் விதைத்து, அதன் பயனாக வளம் பெருகுற்ற விளைவு கிடைப்பினும், நாம் அதனிற் கொள்வது ஒருகை அளவினதே; அவ்வாறு கொண்டதில் உண்பது ஒரு வாய் அளவினதே; அவ்வாறு உண்பதும் ஒரு பொழுதில் ஒரு வயிற்று அளவினதே; அதுவும் ஒரு நாளில் இரு பொழுதளவினதே; அவ் வூண்பாடும் நாம் வாழ்ந்து இருக்கின்ற எல்லையளவினதே! இவ்வழி நாம் மிசைந்து எஞ்சிய ஈட்டத்தினை இன்னவர்க்கு இவ்வளவு எனப்பங்கிட்டு ஈயுமுன் இறந்து படுகின்றோம். எல்லாரும் இருந்தார் என்னும் சுவடு இல்லாதவரே. ஆகலின் நாம்வாழ்ந்து இருக்கும் நாட்களை வாழப்போவார் நன்றியின் நினைவு கூர, உலகச் சுழற்சியில் வந்து கூடிய செல்வப் பெருக்கினார் அவ்வழி வந்து கூடாது வளஞ் சுருங்கினார்க்கு அதனை ஈந்து பெருமையுறுக என்றவாறு.

விரிப்பு:

குன்றம் பொடித்தலும் குரைகடல் பாய்ச்சலும், எந்திரக் கொழுவின் இராப்பகல் உழுதலும், வான வூர்தி மேனிலை நின்று அளப்பற வித்தலும் – முயற்சி அருமை பற்றிக் கூறல் நேர்ந்தது – இல்பொருள் உவமை. பயனுறு உருவகமுமாம். அருமுயற்சியின் விளைவித்தாலும் தாமே நுகர்தல் அருமை என்பது பற்றிக் கொள்ளல், உண்ணல், பொழுது, வாழ்தல் இவற்றிற்கு எல்லையளவு கூற நேர்ந்தது.

எஞ்சியது இன்னவர்க்கு இவ்வளவு எனும் முன் துஞ்சல்–எஞ்சிய ஈட்டத்தைத் தம் பிறங்கடைகளுக்கு உரிமையாக்கு முன் தாம் இறந்து படல்.

இறப்பு நம் வினைப்பாடு முடியுமுன்னரே வந்து பற்றும் என்னும் உறுதி நோக்கிச் சொன்னது.

இருக்குநாள் இருக்க நாம் வாழும் நாளின் வரலாறு பின்னோரால் மறந்து படாமல் நிலைத்து இருக்க. இப்பாட்டு வாழ்வு நிலையாமையையும் அறத்தின் நிலைப்பாட்டையும் சுட்டி, ஈதலறத்தை வலியுறுத்தி நிற்கும், நேரிசை ஆசிரியப்பாவாம்.

இதுவும் பொதுவியல் என் திணையும், பொருண்மொழிக்காஞ்சி என் துறையுமாம்.

(வளரும்)

—த. சலாவுத்தீன், அறி. இ; ஆ. ப.

நில நடுக்கமும் - எரிமலைகளும்

'தாம்பரத்தில் நில நடுக்கம்' என்று சில திங்களுக்கு முன் செய்தித்தாள்களில் செய்தி வந்தது எல்லாருக்கும் தெரிந்திருக்கும் என்று நினைக்கின்றேன். இவ்வாறு செய்திகள் வருவது புதிதன்று. சில ஆண்டுகளுக்குமுன் அகாதீர் என்னுமிடத்தில் மிகவும் கொடூரமான நில அதிர்ச்சி உண்டாயிற்று. ஒரு நகரமே தரைமட்டமாயிற்று. ஆயிரக்கணக்கானவர் இறந்தனர். இந் நிலஅதிர்ச்சி எப்படி உண்டாகின்றது? இக்கேள்விக்கு விடைகாண உலகெங்கும் அறிவியலார் பலர் ஆராய்ச்சிகளை நடத்திய வண்ணமே இருக்கின்றனர்.

இந் நிலநடுக்கம் எவ்வாறு உண்டாகின்றது? என்று சமயக் கணக்கர்களைக் கேட்டோமானால், ஒவ்வொரு வகையாய் விடை சொல்வர். 'இறைவன் மீது மாந்தர் நம்பிக்கை வைக்காததால், இறைவன் பொறுக்காமல் அவர்களை அழிக்கின்றான்' என்று ஒருவர் கூறுவார். கரிசாளர் (பாவிகள்) மிகுதியாகி விட்டார்கள்; ஓர் ஆராய்ச்சியாளன் செயற்கை முறையிலேயே குழந்தையை உண்டாக்குகின்றான். ஆகையால் இறைவன் தன் பெருமையைக் காட்ட நில நடுக்கத்தை உண்டாக்குகின்றான் என்று மற்றவர் கூறுவார். 'நில உலகைத் தாங்கிக் கொண்டிருக்கும் ''ஆதிசேடன்'' பளுவைத் தாங்கமுடியாமல் அசைந்து கொடுப்பதால் நில நடுக்கம் உண்டாகிறது. அவனை வணங்கினால் சரியாகிவிடும்' என்று இன்னொருவர் செப்புவார். மேற்கண்ட கருத்துகளை எந்தப்பகுத்தறிவுள்ள மாந்தனும் நம்பமாட்டான்.

நிலத்தின் உள்ளமைப்பு எவ்வாறு இருக்கும்? ''இது தெரியாதா! மண்ணும் கல்லும் நிறைந்திருக்கும்'' என்று சொல்லத் தோன்றும். ஆனால் உண்மையில் அவ்வாறு இல்லை. மண் மேற்பரப்புக்கடியில்

20 கற்கள் வரை சீரான மண் உள்ளது. சில இடங்களில் 50 கற்கள் வரை இவ்வாறு உள்ளது. இதனை "ஓடு" (Crust) என்கிறோம். இதன் கீழ் பலவகைக் கற்பாறைகள் உள்ளன. இப்பகுதியை 'மேற்றோடு' (Mantle) என்கிறோம். இதற்கு அடுத்துக் 'கரு' (Core) உள்ளது. புவிக்குக் கீழ்ச் செல்லச் செல்ல வெப்பம் மிகுதியாகின்றது. 11,000 அடி கீழ்ச் சென்றால் சூடு 250° பா. இருக்கும். 19,000 அடிக்கும் கீழே 410° பா. இருக்கும். இதனால்தான் ஆப்பிரிக்காவிலுள்ள எல்லாப் பொற் சுரங்கங்களிலும் காற்று பதமாக்கப்படுகிறது (Air-Conditioned). இவ்வாறு செய்யப்படவில்லை என்றால் மாந்தன் அந்த ஆழத்தில் கருகிச் சாம்பலாகிவிடுவான்.

நிலத்தின் 'உட்பகுதியில்' பலஆயிரம் பாகைகள், வெப்பமுள்ளது. அங்குப் பாறைகளெல்லாம் குழம்பாகமாறியிருக்கும். அந்தக் குழம்பில் இரும்பும் நீர்ம நிலையிலுள்ளது. நில உருண்டையின் மையம் திண்மப் பொருளாக இருக்கலாம் என்று அறிஞர்கள் சிலர் கூறுகின்றனர்.

நிலத்திற்கு அடியில் நாம் நினைப்பதுபோல் அமைதி இல்லை. மாறாக எப்பொழுதும் கீழ்ப்பகுதி அதிர்ச்சிக்குட்பட்டுக் கொண்டே இருக்கின்றது. இவ்வகை அதிர்வுகளினால் உள்ளுள்ள பாறைகள் இடம் மாறுகின்றன. சில நேரங்களில் பாறைகள் உடைகின்றன. இவ்வாறு உடையும் பொழுது, நிலத்திற்குமேல் மென்மையான பகுதியில் இவ்வதிர்ச்சி வெளிப்பட்டு மிகுந்த சேதத்தை விளைவிக்கின்றது. இதற்குத்தான் நில நடுக்கம் என்று பெயர்.

நில நடுக்கம் முதலில் மண்ணுக்கு அடியில் 5-இலிருந்து 30 கற்கள் தொலைவில் உண்டாகின்றது. மண்ணுக்கடியில் அதிர்ச்சி எந்த இடத்தில் உண்டாகின்றதோ அந்தஇடத்தை'அதிர்வுமையம்'(Focus) என்று கூறுகிறார்கள். எந்த இடத்தில் இந்த அதிர்வு வெளிப்படுகின்றதோ அவ்விடத்தை "அதிர்வு வெளிப்படும் இடம்"(Epicentre) என்று கூறுகின்றார்கள். சில நேரங்களில் 'அதிர்வு மையம்' 100 கற்களுக்குக் கீழ் உண்டாவதும் உண்டு.

நில நடுக்கத்தைப்பற்றி ஆராயும் பகுதியே தனி இயலாக இருக்கின்றது. இதற்கு 'நில நடுக்க இயல், (Seismology)என்று பெயர். இத்துறையில் ஆராய்ச்சி செய்வோரை 'நில நடுக்க இயலார்'

(Seismologist) என்று கூறுகிறோம். நில நடுக்கத்தையும், அதிர்வு மையத்தையும் காட்ட 'நில நடுக்கக் குறிப்புமானி' (Seismograph) பயன் படுத்தப்படுகின்றது. இதில் ஓர் ஒளிக்கற்றை நில நடுக்கத் திற்கு ஏற்ப ஒருதாளில் கோடுகளை இடுகின்றது. துல்லியமாக அளவு களைக் காட்டும் நில நடுக்கக் குறிப்புமானிகள் பலவுள்ளன. அவற்றுள் சில, ஆயிரம் கற்களுக்கு அப்பால் ஏற்படும் அதிர்ச்சியையும் காட்டு கின்றன.

நில நடுக்கம், அலைகளை உண்டாக்குகின்றது. இந்த அலைகளில் பல வகைகள் உண்டு. (1) முதல் நிலை அலைகள். (Primary waves) அல்லது ''தள்ளு–அலைகள்'' (Push-waves) என்று கூறுகின்றனர். (2) 'இரண்டாம் நிலை அலைகள் (Secondary-waves) அல்லது 'அதிர்வு அலைகள்' என்று கூறுகின்றனர். இவ்வலைகள் நிலத்திற் குள்ளாக நொடிக்கு $2^3/_4$ கற்கள் விரைவில் செல்லுகின்றன. (3) நீள அலைகள் (Long-waves) எனப்படும் மூன்றும் நிலை அலைகள் நிலத் தைச் சுற்றிச் செல்லுகின்றன. இவ்வலைகள் தாம் கட்டிடங்களையும் மற்றவற்றையும் பாழ் செய்பவை.

இம் மூன்று வகையான அலைகளின் உதவியாலேயே நிலத்தின் உட்பகுதியின் அமைப்பை நம்மால் அறிய முடிகின்றது. தள்ளு அலை கள் மட்டும் நிலத்திற்கடியில் நீர்மங்களின் ஊடாகச் செல்லும் திறன் படைத்தவை. அதிர்வு அலைகள் நீர்மங்களினால் தடுக்கப்படுகின்றன. அதிர்வு அலைகள் செல்லும் தொலைவைக்கணக்கிட்டு, மண்ணுக்கடியில் எவ்வளவு தொலைவு வரை திண்மப் பொருள் இருக்கின்றது என்பதை அறியலாம்.

நில நடுக்கக் குறிப்பு மானியைப் பயன்படுத்தி மண்ணுக்கடியில் எங்கு 'அதிர்ச்சி மையம்' கொண்டுள்ளது என்பதை அறியலாம். ஆனால் அஃது எந்த இடத்தில் வெளிப்படும் என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது.

எடுத்துக்காட்டு:– 400 கற்களுக்கப்பால் ஓர் அதிர்ச்சி மையம் கொண்டதாகக் கருவி காட்டுகின்றது என்று வைத்துக் கொள்வோம். அந்த 400 கற்களை ஆரமாகக் கொண்டு ஒருவட்டம் வரைந்தால், அந்த வட்டத்திற்குள் எங்காவது அதிர்ச்சி வெளிப்படும் என்று தெரிந்து கொள்ளலாம்.

இன்னேர் இடத்தில் வைக்கப்பட்ட நில நடுக்கமானி 600 கற்களுக்கு அப்பால் அதிர்ச்சி மையம் கொண்டதாகக் காட்டுகின்றது என்று வைத்துக்கொண்டு இன்னொரு வட்டத்தை வரைந்தால், முதல் வரைந்த வட்டமும் இப்பொழுது வரைந்த வட்டமும் இரண்டு புள்ளிகளில் வெட்டிக் கொள்ளும். ஆகையால் அதிர்ச்சி இந்த இரண்டு புள்ளிகளில் ஏதாவது ஒன்றில் வெளிப்படலாம்.

இத்தோடு இன்னொன்று 1500 கற்கள் தொலைவில் இருப்பதைக் காட்டினால், மூன்ருவது வட்டம் வரைந்து, இம் மூன்று வட்டங்களும் வெட்டும் ஒரு புள்ளி கிடைக்கும். இப்புள்ளியுள்ள இடத்தில் அதிர்ச்சி வெளிப்படும் என்று சரியாகத் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு கணக்கிடுவது எளிதான வேலையன்று. ஆண்டு தோறும் ஆயிரக் கணக்கான அதிர்ச்சிகள் உண்டாகின்றன.

நில நடுக்கம் ஏற்படும் போது நிலமானது பெருமளவு பிளவுபடுகின்றது. இதனால் மிகுதியான சேதம் ஏற்படுகின்றது. 1906-இல் அமெரிக்காவிலுள்ள 'சான்பிரான்சிசுகோவில்' ஒரு நிலநடுக்கம் உண்டானது. சப்பானில், தோக்கியோ நகரில் 1924-இல் ஒரு கடுமையான நில நடுக்கம் உண்டாயிற்று. ஆயிரக்கணக்கான கட்டிடங்கள் இடிந்தன. இதன் காரணமாக தீ உண்டாகி அதனல் வேறு சேதம் மிகுந்தது. ஏறத்தாழ இலக்கம் மாந்தர் வீடிழந்தனர். 20 ஆண்டுக் காலமாக, வடக்கு ஆப்பிரிக்கா, துருக்கி, கிரீசு, சிலி, நியுசிலாந்து ஆகிய இடங்களில் கடுமையான நில நடுக்கங்கள் உண்டாகி உள்ளன.

நில நடுக்கம் நிலப்பரப்பில் மட்டும் ஏற்படாமல் கடல்களில் நீருக் கடியிலும் ஏற்படுகின்றது. இதனல் கடல் கொந்தளிப்புகள் உண்டாகி நகரங்களைப் பாழ்செய்து விடுகின்றன. போர்த்துகலின் தலைநகரமான இலிசுப்பனில் (Lisbon) 1756-இல் கடலில் ஏற்பட்ட நடுக்கத்தால் கடல் அலைகள் முழு நகரத்தையே வெள்ளக் காடாக்கி, நகரமே அழிக்கப்பட்டது. இதேபோல் சப்பானில் கடலில் நில நடுக்கத்தினல் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டது.

எரிமலைகள்

கடவுளர் வெகுண்டெழுந்தால்தான் எரிமலைகள் உண்டாகின்றன. அவர்தாம் நெருப்பைக் கக்குகின்ருர்கள் என்று பழங்குடியினர் நினைத்தனர். ஆப்பிரிக்காவில் சில இடங்களில், உயிருள்ள

மாந்தர்களை எரிமலைகளில் தள்ளிக் கடவுள்களுக்குப் பலி செய்திருப்பதை வரலாறுகளில் காணலாம். பகுத்தறிவின்மையே அப்பலிகளுக்குக் காரணம். இன்று அவ்வாறு செய்வார்களா? செய்யமாட்டார்கள். மாந்தர் பகுத்தறிவைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டனர். எரிமலைகள் எவ்வாறு தோன்றுகின்றன என்பதை ஈண்டுக்காண்போம்.

மண்ணுக்கடியில் மிகுந்த வெப்பமுள்ளது என்று முன்பே தெரிந்து கொண்டோம். நிலத்திற்கடியிலுள்ள இவ் வெப்பத்தால் கற்கள் கூடக்குழம்பாகிவிடுகின்றன. இதனைக் கற்குழம்பு(Magma)என்று கூறுகின்றார்கள். இந்தக் கற்குழம்புதான் எரிமலைகள் தோன்றுவதற்குக் காரணமாகும்.

நிலத்திற்கடியிலுள்ள மிகுந்த வெப்பம் குழம்பு நிலையுள்ள பாறைகளை இன்னும் மிகுதியாக வெப்பமடையச் செய்கின்றது. இதனால் உள்ளுள்ள குழம்பு கனஅளவில் பெருக்கமடைகிறது. பெருக்கம் அடைய அடைய உள்ளே இடமில்லாததால் மிகுந்த அழுத்தம் உண்டாகிக் கீழ்ப்பரப்பிலிருந்து நிலத்தில் தொளை செய்து கொண்டு மிகுந்த விசையுடன் நிலத்தின் மேற்பரப்பில் எரிந்த சாம்பலாகவும், கற்குழம்பாகவும் எறியப்படுகின்றது. இவையே எரிமலைகள்! எரிமலையின் ஓரத்தில் வழிந்துவரும் குழம்பிற்கு உருகுகுழம்பு (Lava) என்று பெயர்.

இத்தாலியில் ''இசுத்தாம்பூல்'' என்ற இடத்திலுள்ள எரிமலை வெப்பமான வளிகளையும், நெருப்பையும் வெளிப்படுத்திக் கொண்டே நீண்ட காலமாக இருந்தது. இது கடலுக்கு அருகே இருந்ததால் இரவு நேரங்களில் கப்பலோட்டிகளுக்குக் கலங்கரை விளக்காக விளங்கிற்று. இதனால் ''நடுத் தரைக் கடலின் கலங்கரை விளக்கு'' என்று இம் மலைக்கு ஒரு பெயருண்டு.

சில எரிமலைகள் மிகவும் கொடூரமாக நெருப்பையும் உருகுகுழம்பையும் வெளிப்படுத்தும். கிழக்கிந்தியாவிலுள்ள ''கிரக்காடோ'' (Krakatoa) என்ற தீவு 1883-இல் அழிந்தது. ஏனென்றால் திடீரென்று ஓர் எரிமலை தோன்றி வெப்ப வளிகளையும் நெருப்பையும் 20 கற்கள் உயரத்திற்கு வாரி எறிந்தது. அங்கு ஏற்பட்ட ஒலியானது ஏறத்தாழ 1000 கற்களுக்கு அப்பால் கேட்டது. எண்ணிப் பார்த்தால் ஏற்பட்ட விளைவு நன்கு தெரியும்.

1961-இல் "திரின்சுடான்-டா-குன்ஃகா" என்ற அட்லாண்டிக் மாக் கடலின் நடுவிலுள்ள தீவில் இருந்த எரிமலை வெடித்து முழுத் தீவும் பாழடைந்தது. அங்கிருந்த மாந்தர் படகுகள் வழியாகத் தப்பி னர். இன்று அங்கே மாந்தரால் வாழ முடியாது

1943-இல் மெக்சிகோவில் ஓர் உழவர் மண்ணைத் தோண்டிக் கொண்டிருக்கும்பொழுது திடீரென்று ஒரு பள்ளத்திலிருந்து புகை வெளியே கிளம்பியதைக் கண்டார். அதன்பிறகு அங்குள்ள நிலம் மெதுவாக மேலெழும்பியது. பிறகு பாறைகள் வெளியே தூக்கி எறியப்பட்டன. ஒரு கிழமைக்குள் அந்த எரிமலை 500 அடி உயரம் மண்ணுக்குமேல் வந்து விட்டது. இரண்டாண்டுகளில் அது 1500 அடிகள் உயரம் உயர்ந்தது. ஏறத்தாழ 10 ஆண்டுகள் அது நெருப்பைக் கக்கிய வண்ணமாகவே இருந்தது. மாந்தர் எரிமலைகளுக்குப் பக் கத்தே இருந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். எரிமலைகளுக்கு அருகேயுள்ள நிலங்கள் செழிப்புள்ளவையாகவே இருக்கின்றன. ஆனால் அங்கே அஞ்சிக்கொண்டுதான் வாழவேண்டும்.

சில இடங்களில் வெப்ப நீர் ஊற்றுகள் உள்ளன. சில இடங் களில் மண்ணுக்கடியிலிருந்து நீராவியே வெளிவருகின்றது. இப்படிப் பட்ட நீர் ஊற்றுகள் "அயிசுலாந்து", அமெரிக்காவிலுள்ள "எல்லோ இசுத்தோன்பார்க்" என்ற இடங்களில் இருக்கின்றன. மண்ணுக்கடியி லுள்ள வெப்பத்தால் நீரானது வெப்படைந்து, பெருக்கமடைந்து மிகுந்த அழுத்தத்துடன் மண்ணுக்குமேல் பீச்சியடிக்கப்படுன்றது.

நாம் நினைப்பதுபோல் இந் நிலவுலகம் அமைதியாக இல்லை. பல அதிர்ச்சிகளுக்கு உள்ளாகிக் கொண்டே இருக்கின்றது. இதனால்தான் நிலத்தின் மேற்பரப்பு மாறிக்கொண்டே இருக்கின்றது. இம்மாறுதல் சிறுகச் சிறுகத்தான் நடைபெறுகின்றது. கடல்கள் சில இடங்களில் முன்னேறி வருகின்றன. சில இடங்களில் பின்னே சென்று கொண் டிருக்கின்றன. ஆராய்ச்சியாளர்கள் நில நடுக்கங்களைப் பற்றியும் எரிமலைகளைப் பற்றியும் ஆராய்ந்து கொண்டே இருக்கின்றார்கள். இன்னும் சில நாட்களில் எந்த இடத்தில் எப்பொழுது நில நடுக்கம் உண்டாகும் அல்லது எரிமலை தோன்றும் என்பதை முன்கூட்டியே தெரிவித்து மாந்தரைக் காப்பாற்ற முடியலாம்.

அச்சாகு நூலெல்லாம் நூலாமோ? ஆங்கு சிலர்
மெச்சியுரை செய்வதனால் மேலாமோ? — முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோறாய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு!

பொறியியல் (தமிழ்த் திங்களிதழ்)

வள்ளுவராண்டு: 1997. மாசி. விலை: 50 காசுகள்.
ஆசிரியர்: பொம்முராசா, கோயம்புத்தூர்.

பொறியியல் நுணுக்கங்களைத் தமிழில் கொணர்வதற்காக நடந்து வரும் இம் முயற்சி வரவேற்கத் தகுந்ததாகும். தமிழில் கலைச்சொல் ஆக்கத்துக்கு எத்தகைய ஆர்வம் எழுந்துள்ளது என்பதற்கும், அவ்வார்வம் எத்துணைப் பயன் விளைக்கின்றது என்பதற்கும் இவ்விதழ் சான்றாகும். பல நற்றமிழ்ச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆயினும் இம் முயற்சி மேலும் செப்பமாக அமைந்தால் பயன் மிகுதியாகும். செய்வன திருந்தச் செய்யப்படல் வேண்டும். பிறமொழியிலுள்ள பொறியியல் கருத்துகளைத் தமிழ் மொழியில் கொணர வேண்டும் என்று நினைக்கும் அளவிலேயே அவற்றைத் தமிழ்ச் சொற்களில் தான் (அதாவது தனித்தமிழில் தான்) கொண்டுவர வேண்டும் என்பது சொல்லாமலேயே தேறி நிற்பதாம். என்னை? தமிழில் வழங்கும் பிற மொழிச் சொற்கள் எவ்வளவுதான் பயில வழங்கினும் தமிழ் ஆக மாட்டா என்பதால். நிருணயம், நவீன, சோதனை, கலாச்சாரம் போன்ற வடசொற்கள் இன்று தமிழாகவே கருதப்பட்டு வழங்கினால், Design, Modern, Test, Culture போன்ற ஆங்கிலச் சொற்களை அப்படியே டிசைன், மாடர்ன், டெஸ்ட், கல்ச்சர் என்று எழுதிப்பழகி விட்டோமானால் அவையும் தமிழாகி விடும். தமிழில் சொல்லாக்கம் எதற்கு? பொறியியல் என்று கூடச் சொல்லத் தேவையிருக்காதே. என்சினீயரிங் என்று குறித்தாற் போதுமே!

நூற்றைம்பது ஆண்டுகளாகத் தமிழிற் புகுந்துள்ள ஆங்கிலச் சொற்கள் எவ்வாறு தமிழுக்குப் புறம்பானவையோ அவ்வாறே இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் தமிழிற் புகுத்தப்பெற்ற வட சொற்களும் புறம்பானவையேயாகும். தமிழாக்கம் செய்யும் ஒவ்வொருவரும் இவ்வுண்மையைத் தெரிந்து கொள்வாராயின் தமிழுக்கு அப்பொழுதுதான் உண்மைப் பயன் விளையும்.

—'கல்லாடன்'

ஓடிவாரீர் உலகீர் !

வள்ளல் பாவேந்தன் வாரி வழங்கிய
தெள்ளு தமிழ்த்தேன் அள்ளிப் பருகிட
கூடி வாரீர் உலகீர்! – இன்னே
ஓடி வாரீர் உலகீர் !

இருட்டறை யூடே எழுந்தசெஞ் ஞாயிறு !
ஏங்கும் பயிர்க்கென இழிதரு வான்மழை !
புரட்டரை வேரொடு புரட்டும் மறப்புயல் !
பூவினும் மென்மனப் புதுமைத் தென்றல்! (வள்ளல்)

அரிமா நோக்கு; ஆணை யிடுங்குரல்;
ஆண்ட எந்தமிழ் அரியணை நெஞ்சம்;
விரிமா நிலத்தில் எவர்க்கும் அஞ்சா
வேங்கை; புரட்சிப் பூங்கா வான (வள்ளல்)

சாதி நெருப்பினைத் தகர்க்கும் நிலைகடல்!
சமயப் புளுகினைப் பொசுக்கும் எரிமலை!
பாதியிற் புகுந்த பழிதரு கொள்கைகள்
பஞ்சாய்ப் பறந்திடப் பகுத்தறி வூட்டிய (வள்ளல்)

அச்சம் பறக்கும் ஆண்மை சுரக்கும்,
ஆமையரும் முழங்கு அரிமா ஆகலாம்.
உச்சி வானிடி மார்பினில் ஏற்கலாம்.
ஒவ்வொரு பாடலும் வரிப்புலி உறுமல்! (வள்ளல்)

இருண்ட வீட்டில் இருக்கின்றீரா ?
எடுத்துக் கொள்க குடும்ப விளக்கை !
மருண்ட நெஞ்சர் சஞ்சீவிச் சாரல்
வஞ்சியின் பேச்சில் நெஞ்சந் திளைக்க ! (வள்ளல்)

சிரித்தறி யாதார் அழகின் சிரிப்பைத்
திறந்தாற் போதும் தீர்ந்திடும் துன்பம்;
உரித்தசெவ் வாழை உயர்சுவைக் காதல்
ஒவ்வொரு நூலிலும் உமைவர வேற்கும் (வள்ளல்)

பாண்டியன் பரிசு வேண்டுமா? வருக !
பைந்தமி ழியக்கப் பாசறை புகுக !
ஈண்டென் அழைப்பினை ஏற்றுவந் தீரேல்
எதிர்பா ராத முத்தமுங் கிடைக்கும் (வள்ளல்)

அள்ளும் நகைச்சுவை நாடகங் காணலாம்;
ஆடை நனையா(து)தேன் அருவியிற் குளிக்கலாம்;
பிள்ளைகட் கான பாடலும் உண்டே !
பெற்ற மகாரொடு சுற்றமுஞ் சூழ (வள்ளல்)

-இரா. இளவரசு-

திருவள்ளுவரின் திருவுள்ளம்.

சிறந்த இலக்கிய நூல்களைப் படைக்கும் எந்தப் புலவனுக்கும்–எழுத்தாளனுக்கும் ஒரு நல்ல நோக்கம் கட்டாயம் இருக்கும். அஃது அவனுடைய எழுத்துகளில் நன்கு தெரியும். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை எழுதினுர் என்ருல் அவர் மூன்று கருத்துகளை மக்கள் மனத்தில் பதியச் செய்ய வேண்டும் என்பதற்காகவே அதனை எழுதியதாகத் தெரிகிறது. ''அரசியலில் தவறு செய்கின்றவனை அறமே கூற்றமாக இருந்து கொல்லும். கற்புடைய பத்தினிப் பெண்டிரை உயர்ந்தோர் போற்றிப் புகழ்ந்து வணங்குவர். ஒருவர் செய்தவினை அவரை எப்படியும் வந்து பற்றித் துன்புறுத்தவே செய்யும்.'' என்னும் மூன்று உண்மைகளையும் மக்கள் தெளிவாக உணர வேண்டும் என்பதற்காகவே அவர் சிலப்பதிகாரத்தை எழுதியிருக்கிருர் என்பது

''அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் ருவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாக
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்''

என வருகின்ற பதிகத்தின் அடிகளிலிருந்து நமக்குத் தெரிகிறது. நூலைப் படிக்கையிலும் நமக்கு இந்த உண்மைகள் புலப்படுகின்றன.

இப்படியே திருவள்ளுவர் திருக்குறளை ஏன் எழுதினர் – எந்த நோக்கத்தோடு எழுதினர் என்று பார்த்தால், உலகத்தில் மக்களாகப் பிறந்தவர்கள் வாழ வேண்டிய முறைப்படி வாழ்ந்து மாந்தத் தன்மை யின் உயர்ந்த எல்லையை அடையவேண்டும் என்பதற்காகவே எழுதிய தாகத் தெரிகிறது இல்வாழ்க்கை என்னும் அதிகாரத்தில் வருகின்ற ஒரு குறள் இதனை நமக்குப் புலப்படுத்துகிறது.

> "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும்". —குறள் 50.

"இந்த உலகத்தில் வாழ வேண்டிய முறைப்படி வாழ்கின்றவன் அழகு தங்கும் அல்லது தூய்மை வாழும் தெய்வத் தன்மையில்—மேலான தன்மையில்—வைத்து என்னப்படுவான்" என்கிருர். இந்தக் குறளில் வருகின்ற "வாழ்வாங்கு வாழ்தல்" என்பதற்கான விளக்கத்தைத்தான் மற்றைய 1329 குறட்பாக்களில் அவர் சொல்கிருர்.

மாந்தத் தன்மையின் உயர்ந்த எல்லைக்குத் தமிழில் ஒரு பெயர் உண்டு. அதுதான் சான்ருண்மை என்பது. மாந்தத் தன்மையின் தாழ்ந்த எல்லைக்கும் தமிழில் ஒரு பெயர் உண்டு. அதுதான் கயமை என்பது. ஒரு நெறியைக் கடைப் பிடித்து வாழாமல், நெருக்கித் துன் புறுத்தப்பட்டால் அன்றிப் பிறர்க்குப் பயன்படாமல், பிறர்மேல் குற்றம் காண்பதையே தொழிலாகக் கொண்டு, உருவத்தால் மட்டுமே மக்களைப் போல் இருந்து, மனம் போன போக்கில் நடக்கின்ற கயமைத் தன்மையுடைய கயவனுக மாந்தன் வாழக்கூடாது. ஒரு நெறியில் நின்று நல்லனவற்றையெல்லாம் தன்கடமையாகக்கொண்டு, ஒப்புரவு அறிந்து, கைம்மாறு கருதாது பெய்யும் மழைபோல் பிறர்க்கு உதவியாக இருந்து, யாருக்கும் எப்போதும் எந்த அளவும் மனத்தா லும் தீமையை நினைக்காமல், அழுக்காறும் அவாவும் அற்ற மனத் தூய்மையோடு நிறை குணமாகிய சான்ருண்மைத் தன்மையுடைய சான்ருேனுகவே மாந்தன் வாழல் வேண்டும். அவ்வாறு வாழ்வதே மாந்தப்பிறவியின் பயன் ஆகும் என்பதையே திருவள்ளுவர் நமக்குச் சுட்டிக் காட்டுகிருர். மாந்தன் அடையக் கூடிய அடைய வேண்டிய மிக உயர்ந்த நிலை சான்ருேன் ஆதல்தான் என்பதைத் தெளிவாகச் சொல்கிருர்.

குழந்தையைப் பெற்று எடுக்கும் தாய்க்குக் குழந்தையைப் பெற்றெடுத்தவுடன் உண்டாகின்ற மகிழ்ச்சி மிகுதியாக இருக்கும். அதை விட மிகுந்த மகிழ்ச்சியை அவள் எப்போதாவது காண முடியுமா என்றால் முடியும் என்கிறார் திருவள்ளுவர். எப்பொழுது என்றால் தன் மகனைச் சான்றோன் என்று பிறர் பாராட்டிக் கூறுவதைக் கேட்கின்ற பொழுது என்கிறார்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்". —குறள் 69.

தன் மகனை நிறை பண்புடைய சான்றோன் என்று பிறர் புகழ்ந்து கூறக் கேட்கின்ற தாய் அவனைப் பெற்றெடுத்த காலத்திலும் மிகுந்த மகிழ்ச்சியடைவாள் என்கிறார்.

தம் மக்கள் சான்றாண்மை நிறைந்த பண்புடையவர்களாக இருப்பதைக் கேட்டுத் தாயும் தந்தையுமாகிய இருவருக்குமே மிகுந்த மகிழ்ச்சி ஏற்படும். பின்னே திருவள்ளுவர் தாயை மட்டும் குறிப்பிட்டுக் கூறுவானேன் என்றால் அவர் இங்கே இந்த மகிழ்ச்சியை வேறொரு மகிழ்ச்சியோடு ஒப்பிடுகிறார். குழந்தை பிறந்த உடன் பெற்றோர் இருவருக்குமே மகிழ்ச்சி ஏற்படுகிறது என்றாலும் தான் ஒரு துன்பமும் படாமல் குழந்தை பிறந்திருப்பதைக்கேட்டு ஒரு தந்தைக்கு உண்டாகும் மகிழ்ச்சியைவிடப் பத்து மாதம் சுமந்து வருந்தித் துன்பப்பட்டுக் குழந்தையைப் பெற்றெடுக்கும் தாய்க்கு உண்டாகும் மகிழ்ச்சியே மிகுதியாக இருக்கும். அந்தப் பெரு மகிழ்ச்சியைவிடத் தன் மக்கள் பண்புடைய சான்றோர்களாகத் திகழ்கிறார்கள் என்பதைக் கேட்கின்ற பொழுது ஏற்படும் மகிழ்ச்சி எல்லையற்றது என்பதைக் குறிக்கவே திருவள்ளுவர் இங்கே தாயின் மகிழ்ச்சியைச் சிறப்பாகச் சொல்கிறார்.

தன் மகனைப் பெருஞ்செல்வன் என்றுகேட்டு அன்று; பேரறிஞன் என்று கேட்டு அன்று; சான்றோன் என்று கேட்டே ஒரு தாய் மிகுந்த மகிழ்ச்சி அடைவாள் என்பதிலிருந்து மக்கட் பிறவியின் பயனே அது தான் என்பதைத் திருவள்ளுவர் கோடிட்டுக் காட்டுகிறார். அவர் சான்றோர்க்குத் தருகின்ற சிறப்பு எவ்வளவு தெரியுமா? "குணநலன் சான்றோர் நலனே"–சிறந்த குணம் என்று சொல்லப்படுவது சான்றோர்களிடம் உள்ள குணம்தான் என்கிறார். சான்றோர்களாக வாழ முடியாதவர்கள் சான்றோர்கள் மதிக்கும் படியாகவாவது வாழவேண்டும்

என்கிறார். கள் குடிப்பவர்களைச் சான்றோர் மதிக்கமாட்டார்கள். ஆகவே கள் குடிக்காதீர்கள்! சான்றோர்களால் தாங்கள் மதிக்கப்பட வேண்டா என்று நினைப்பவர்கள் வேண்டுமானால் கள் குடிக்கட்டும். சான்றோர் மதிக்க வாழ்பவர்கள் கள்ளைக் குடிக்கக் கூடாது'' என்கிறார்.

''உண்ணற்க கள்ளை உணில் உண்க சான்றோரால்
எண்ணப்பட வேண்டா தார்''. –குறள் 922.

''ஒருசெயல் செய்யக் கூடாதது என்று சான்றோர்கள் சொல்கிறார்கள் என்றால், அந்தச் செயலை எப்படிப்பட்ட நேரத்திலும் எத்தகைய நிலையிலும் செய்யக் கூடாது. தன்னை ஈன்றெடுத்த தாய் பசியால் வாடுவதைக்காண நேரினும், அந்தத் தாயின் பசியைப் போக்குவதற்காக வேண்டியும் சான்றோர் கூடாது என்று பழித்துக் கூறும் செயல்களை செய்யக் கூடாது'' என்கிறார்.

''ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை''. –குறள் 656.

பண்புடைய சான்றோர்களால்தான் இந்த உலகம் நிலையாக இயங்கி வருகின்றது. இல்லையென்றால் இந்த உலகம் எப்பொழுதோ அழிந்து மண்ணாகிப் போயிருக்கும் என்கிறார்.

''பண்புடையார் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்''. –குறள் 996.

சான்றோர்களின் நிறைந்த பண்பாகிய சான்றாண்மை என்பது குறைந்து விடுமேயானால் இந்தப் பெரிய நிலவுலகமும் தன் கனத்தைத் தாங்க முடியாமற் போய்விடும் என்கிறார்.

''சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை''. –குறள் 990.

இவ்வளவு சிறப்புக்குரிய சான்றோர்களாக நாம் வாழவேண்டும் என்றால் என்ன செய்யவேண்டும்? இவ்வளவு சிறப்புக்குரிய சான்றோர் ஆவதற்கான வழியென்னவென்றால் திருவள்ளுவர் சொல்கிறார். ''நாம் அன்புடையவர்களாக இருக்கவேண்டும்; நாணமுள்ளவர்களாக இருக்க வேண்டும்; ஒப்புரவு அறிந்தவர்களாக இருக்க வேண்டும்; கண்ணோட்டம் காட்டுபவர்களாக இருக்க வேண்டும்; உண்மையைக் கடைப்பிடிப் பவர்களாக இருக்க வேண்டும்'' என்கிறார். அன்பும் நாணமும் ஒப்

புரவும் கண்ணோட்டமும் வாய்மையும் ஆகிய இந்த ஐந்தும்தாம் சான்ருண்மைக்கு அடிப்படையானவை. இந்த ஐந்து பண்புகளும் சான்ருண்மை என்பதைத் தாங்கி நிற்கும் தூண்கள் போன்றவை, என்கிருர்.

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்". —குறள் 983.

எனவே நாம் சான்ருேராக வேண்டுமென்ருல், முதலில் நாம் எல்லாரிடமும் அன்போடு பழகக்கற்றுக்கொள்ளல் வேண்டும். வாழ்க்கையில் அன்பைப்போற்றி வாழத் தெரிந்து கொள்ளல் வேண்டும். மாந்த வாழ்க்கைக்கு உயிர் போன்று இருப்பது அன்புதான். மாந்தனின் அகத்து உறுப்பாக இருப்பது அன்புதான். அறத்திற்குத் துணையாக இருப்பது அன்புதான். நட்புக்கு நிலைக்களனுக இருப்பதும் அன்புதான். அன்புதான் பிறரிடம் பழகுவதற்கான ஆர்வத்தை-விருப்பத்தைத் தருகிறது. அந்த விருப்பமாகிய ஆர்வம்தான் நட்பு என்று சொல்லப்படுகின்ற அளவிட முடியாத பெருஞ் சிறப்பைத்தருகிறது.

"அன்பு ஈனும் ஆர்வமுடைமை அது ஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு". —குறள் 74.

பிறருக்கு உதவி செய்யுமாறு மாந்தனைத் தூண்டுவது இந்த அன்புதான். தன்னலத்தை மறந்து பிறர் நலத்தை எண்ணச்செய்வது அன்புதான். அன்பும் தன்னலமும் ஒன்றுக்கொன்று பகையானவை. அன்பு உள்ள இடத்தில் தன்னலம் இருக்காது. தன்னலம் இருக்கும் இடத்தில் அன்பு வாழாது. அன்பு குறையக்குறையத் தன்னலம் மிகுதியாகும். தன்னலம் குறையக்குறைய அன்பு பெருகும். அன்பில்லாத வாழ்க்கை தன்னலம் மிக்க வாழ்க்கை. தனக்கென்று வாழ்கின்ற வாழ்க்கை. பிறர்க்குப் பயன்படாத பண்பில்லாத வாழ்க்கை. அன்புள்ள வாழ்க்கையே தன்னலமற்ற வாழ்க்கை. பிறர்க்கென்று வாழும் பண்புள்ள வாழ்க்கை. அன்பில்லாதவர்கள் எல்லாப் பொருள்களையும் தமக்கே உரிமையாக்கிக் கொண்டு வாழ்வார்கள். அன்புடையவர்களோ தம்முடைய உடம்பையும் எலும்பையும்-பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வார்கள்.

"அன்பிலா ரெல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு". — குறள் 72.

மாந்தன் குழந்தைப் பருவத்திலேயே பிறரிடம் அன்பு காட்டத் தெரிந்து கொள்கிறான். முதலில் தாயிடம் அன்பு காட்டுகிறான். தந்தையிடம் அன்பு காட்டுகிறான். பின்னர் உடன் பிறந்தோரிடம்—உற்றார் உறவினரிடம் அன்பு காட்டுகிறான். தன்னோடு பழகுபவர்களிடம் அன்பு காட்டுகிறான். பிறகு அவனுக் கென்று ஒருத்தி வாழ்க்கைத் துணைவியாக வந்து அமைந்த உடன் அவளிடம் அன்பு காட்டுகிறான். அதற்கு முன் மற்றவர்களிடம் காட்டிய அன்பைவிடத் தன் மனைவியிடம் பேரன்பு காட்டுகிறான். அவளும் அப்படியே அவனிடம் பேரன்பு காட்டுகிறாள். அந்தப் பேரன்புக்குத்தான் காதல் என்றுபெயர். இந்தக் காதலன்பு கணவன் மனைவியர்களாக வாழ்பவரிடையே என்றென்றும் நிலையாக இருக்க வேண்டும். இந்தக் காதல் அன்புக்கு ஊறு நேராமல் அவர்கள் வாழ வேண்டும். அவ்வாறு வாழ்வதைவிட இன்பமானது வேறுஇல்லை என்பதைத்தான் திருவள்ளுவர் இன்பத்துப் பாலில் விளக்கிச் சொல்கிறார்.

காதலன்பு மாறாமல் வாழ்வதற்குக் கணவன் மனைவியரிடையே விட்டுக் கொடுக்கின்ற மனப் பான்மையும் பொறுமையும் இருக்க வேண்டும். "ஒருவர் பொறை இருவர் நட்பு". ஒருவர் பொறுத்துக் கொண்டு செல்வதுதான் இருவரிடையே உள்ள நட்பை வாழ வைக்கும் என்பதை அவர்கள் உணர்ந்து வாழ வேண்டும். ஈருடல் ஓருயிர் என்னும் வகையில் வாழ்பவர்களாயினும் கணவன் மனைவியருடைய நீண்ட வாழ்நாளில் சிறுசிறு பிணக்குகள்—பூசல்கள்—தோன்றாமல்இரா.

தமிழக விடுதலைப்படை !

விரைவில் அமைக்கப்படும்.

அமைக்கவிருக்கும் இப்பேரணியில்

உங்களையும் ஒரு மறவனாக்கிக்கொள்ள

அணியமாயிருங்கள்!

—மகிபை. பாவிசைக்கோ—

கெடுக நெஞ்சம் கடிதிவர் நிலையே !

முற்றும் தமிழ்ப்பயிர்க் காரியப் புன்மை எலிகளினால்
உற்ற இடர்களை வார்தமி ழோரெனும் நல்விழைவால்
நெற்றி வெயர்த்திட நல்லுடல் சோரஉள் நெட்டுயிர்க்கப்
புற்றுக் கிடையோர் புதுக்குடில் கட்டிச் சலித்தனமே !

மேவித் தமிழ்விடு தலையுறும் என்றே வேட்டெழுந்து
கூவித் தமிழ்த்திறம் பாடித் துறைதொறும் நல்லுணர்வைத்
தூவிப் பயன்விளைக் கும்உழ வோரெனத் தோய்ந்துழற்றிச்
சாவிக்கு நீரிறைத் தோமென் றறிந்துளம் சாம்பினமே !

குட்டும் பகைவர்நெஞ் சாங்குலை ஆடக் குவிந்தடர்ந்தே
எட்டுத் திசையும் தமிழ்மறம் சேர்ப்பர் இளைஞரெனும்
மட்டில் விழைவினால் வாழ்க்கை நலங்கள் தமையொடுக்கிப்
பட்ட மரங்களுக் கேஎரு வாக்கிப் பதறினமே !

கோலைப் பிடித்த வடக்கரை, நம்மின் குடிபழி,பூ
ணூலைத் தொடுத்துள சிண்டரைப் பெரிதும் ஓம்பிஅவர்
காலைப் பிடித்தழும் கீழ்நிலை மாந்தர் அரசியலென்
பாலைப் புறத்தொரு பைங்கிண றூழ்த்துப் பதைத்தனமே!

ஈகமும் மானமு மேயெமை ஊக்கிட, புல்லுயிரே
பாகென நாணத்தை வீசி அரசியல் வீண்புரட்டர்
போகும் வழிக்கெலாம் போய்அவர் பாங்கில் பழிகிடந்து
சாகும் பிணங்களுக் கேதமிழ் ஓதிச் சவண்டனமே!

அன்னைக் கொருபணி ஆற்றல் கரிசெனும் ஆய்விலரை
முன்னைப் புகழ்த்தமிழ் மூதூர் உயர்வர லாறியம்பும்
பொன்னை நிகர்பனு வல்,கரி யாவும் புதைத்ததுபோல்
இன்னும் தயக்கமேன் உன்னுள் ஒடுக்கிட ஏ,நிலமே!

கறையும் புரைசலும் சேர்ந்திழி யும்தமி ழோர்நிலைகண்
டுறையும் குருதியும் ஓடக்குளி ருணர் வூழ்த்தெமக்குள்
நிறையும் நிலைதவிர்; நைப்பில் உழலும் மாக்களுக்கோர்
முறைசெய் துனக்குளே மூழ்கடிப் பாய்உயர் முப்புனலே!

காட்டு மிசோக்களும் நாகரும் கூடக் கனன்றெழுந்து
நாட்டு விடுதலைக் காற்றுதல் காணும் உணர்வுடையார்
பாட்டையும் தொண்டர் பசிக்கும் வயிற்றையும் விட்டடர்ந்து
வாட்டித் தமிழரின் வாழ்வொழிப் பாய்எரி வெந்தழலே!

நாயின் இழிந்துகீழ்ப் பன்றியின் புன்மை நலஞ்சுவைக்கத்
தோயும் இழிஞர் தமிழ்க்குமு காயம் திருந்தலல்லால்
தேயும் வளத்தொடும் தேம்பும் உளத்தொடும் வாழ்வதுவோ?
ஓயும் நிலைகொடுத் தேகிடு வாய்ஒ உயிர்வளியே!

ஆண்டதும் ஒன்னூர் அலறிக் கிடந்ததும் தாம்மறந்து
வேண்டித் திரியும் கழிசடை மாந்தர் தமிழகத்தைப்
பூண்டொடு கல்லிப் புழுதியாய்த் தெள்ளிப் படர்புகைஉன்
நீண்ட வெளியில் நிலவிடச் செய்வையே நீள்விசும்பே! O

மக்களவை

இவரா கல்லூரித் தலைவர் ?

அன்புள்ள ஐயா, வணக்கம்.

எங்கள் அரசினர் கல்லூரித் தலைவர் திரு.மு. இராசாக்கண்ணனார் அவர்கள் அண்மையில் சென்னைக்கு மாற்றப்பட்டார் என்று கேள்விப்பட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். அந்த மாற்றமும் அவரே விரும்பி ஏற்றுக்கொண்டதாகும் என்றும் கேள்விப்பட்டோம். இவர் இங்கு எங்கள் கல்லூரித் தலைவராக இருந்த காலத்தில் செய்த அட்டூழியங்களுக்குக் கணக்கு வழக்கில்லை. தலைக்குயர்ந்த மாணவர்களையும், ஏன்— கல்லூரி ஆசிரியர்களையும் இவர் என்றுமே மதிப்பாகப் பேசியதும் இல்லை; நடத்தியதும் இல்லை. அவர்களிடம் தரக்குறைவாகப் பேச இவர் தயங்கியதே இல்லை. ஆசிரியர்களை 'வாடா, போடா' என்றே அழைப்பார். இவரால் மாணவர்களாகிய எங்களுக்கு எவ்வளவு தொல்லைகள் இருந்தனவோ, அவற்றைவிட ஆசிரியர்களுக்குத் தொல்லைகள் இருந்தன. ஆசிரியர்களுக்குள் ஒருவர்க்கொருவரைச் சிண்டு முடியும் வேலையில் இவருக்கு நிகர் இவரேதான். இவருக்கு ஒற்றர் வேலை செய்யும் மாணவர்கள்தாம் தேர்வில் வெற்றி பெறுவர். ஆசிரியர்கள்மேல் மாணவர்கள் சிலரைக்கொண்டு மொட்டை மடல்கள் எழுதச் சொல்லி அவற்றின்மேல் நடவடிக்கை எடுப்பார். சூழ்நிலை

களைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறுவதில் இவர் சரியான பச்சோந்தி. திரு. பக்தவத்சலம் முதலமைச்சராக இருந்த பொழுது அவர் கால்பட்ட இடமெல்லாம் பொன் விளையும் என்று சொல்லிக்கொண்டிருந்தவர், தி. மு. க ஆட்சிக்கு வந்தபின் தாமும் ஒரு தி. மு. க என்று வகுப்பிலேயே வெளிப்படையாகச் சொல்லிப் பெருமைப் படுவார். திரு. நெடுஞ்செழியனைக்கூட தம் மாணவர் என்று எங்களிடம் புளுகியுள்ளார். இவர் சரியான கள்ளக் கடத்தல் பேர்வழி என்று கேள்விப் படுகின்றோம். இதன்வழி இவர் நிறையப் பொருள் சேர்த்துள்ளதாகத் தெரிகின்றது. இந்தப் பெருமையில் 'என்னை எவரும் அசைக்க முடியாது' என்று வகுப்பிலேயே கத்துவார். "என் வேலை போனாலும் எனக்குக் கவலையில்லை; என் நரை மயிரில் அரை மயிர் போயிற்று என்று நினைத்துக் கொள்வேன்" என்று அடிக்கடி எங்களிடம் கூறுவார்.

விடுதியில் படிக்கும் மாணவர்களை மேற்பார்வையிட இவர் சில இரவுகளில் விடுதிக்கு வருவார். அப்பொழுது எங்களைப் பார்த்து அவர் பேசும் பேச்சு மிகவும் கீழ்த்தரமாக இருக்கும். ஒரு நாள், எங்களைப்பார்த்து, "இரவு 10மணிக்குமேல் உங்களுக்கெல்லாம் துடிப்பு ஏறுகின்ற நேரம். படிப்பு எங்கிருந்து ஏறும்" என்று கூறினார். (இங்கு எழுதியதை நல்ல பண்புள்ளவர்கள் பொறுக்க வேண்டும்.) ஆனால் அவர் பேசிய பேச்சுகளை நினைத்தாலே எங்களுக்குக் குமட்டல் வரும். ஒரு கல்லூரித் தலைவர் – அதுவும் தமிழ்ப்படித்தவர் இப்படிப் பேசுவது எங்களுக்கு மானக்கேடாகவே இருந்தது. இப்பொழுதுள்ள அமைச்சர்களில் ஒருவரை ஒருநாள் மிகவும் தரக்குறைவாக வகுப்பில் பேசிவிட்டார். இஃது அந்த அமைச்சரின் காதுகளுக்கு எட்டிவிட்டதை யறிந்து, அவர் இவ்வூருக்கு வந்ததும் கல்லூரிச்சார்பில் 1500 உருபா செலவில் ஒரு பெரிய வரவேற்புக் கொடுத்துத் தப்பித்துக் கொண்டார். அதுவும் கல்லூரி விடுமுறைக்குப் பின்னர்.

இவர் விடுதிப் பணத்தைக் கையாடும் வழக்கமுள்ளவர் என்று மாணவர்கள் சிலர் பேசிக்கொள்கின்றனர். இவர் முன்பு வேலை பார்த்த உதகமண்டலக் கல்லூரியில் இவர் நடந்து கொண்ட முறைபற்றி, 22-11-63, 8-5-64, 5-6-64-ஆம் நாட்களில் Broadway Times என்ற இதழில் வெளியாகி உள்ளது. அதில் இவர் நடத்தியதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் திருவிளையாடல்கள் இங்கும் நடத்தப்பட்டன. இவ்வாண்டு 62% மாணவர்கள் தேர்வில் வெற்றி பெற்றனர். இதற்குக்

காரணம் தேர்வின்பொழுது மாணவர்களின் ஒழுங்கற்ற போக்கு களுக்குத் துணை நின்றதோடு, முற்கூட்டியே வினாத்தாட்களை வெளிப் படுத்தச் சில பித்தலாட்டங்களைக் கையாண்டார் என்றும், தேர்வுத் தாட்கள் திருத்தப்பட்ட ஊர்களுக்குச் சென்றுவந்தார் என்றும் பேசிக் கொள்ளப்படுகிறது.

கல்லூரியில் உள்ள மரங்களின் இலைதழைகள் கடலூர்-வண்டிப் பாளையத்தில் இருக்கும் இவருடைய நிலத்திற்கு உரமாகவும், கிளை முதலியவை இவர் வீட்டிற்கு விறகாகவும் பயன்படுத்தப்பட்டிருக் கின்றன. மரங்களில் உள்ள புளி, மாங்காய்கள், தேங்காய்கள் எல்லா வற்றையும் இவர் ஒன்று விடாமல் கொள்ளையடித்துக் கொண்டு போனார். கடைநிலை ஊழியர்களில் 16 பேர் இவர் நிலத்தில் வேலை செய்ய வரவில்லை என்பதற்காக அவர்களை வேலையிலிருந்து நீக்கினார். ஆசிரியர் ஒருவரைச் செருப்பால் அடிப்பேன் என்று சொல்ல, அந்த ஆசிரியர் தம் காலில் இருந்ததை எடுத்துக்காட்டி, 'என்னிடமும் செருப்புஇருக்கிறது' என்று கூறினார் என்றும் கேள்விப்பட்டோம்.

பொறுப்பும், நாணயமும், பண்பும் வாய்ந்த கல்லூரித் தலைவர் போன்ற பதவிகளில் இத்தகைய கீழ்த்தரமான பேர்வழிகளை (அவர்கள் எவ்வளவு படித்தவர்களாக இருந்தாலும்) அமர்த்தி மாணவர்களையும் ஆசிரியர்களையும் கல்விக் கூடங்களையும் பாழாக்க வேண்டாவென்று மாணவர்களாகிய நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம். இப்படிப்பட்ட வர்கள் எந்த இடத்திற்குப் போனாலும் ஒழுங்காக இருக்கமாட்டார்கள். அரசினர் இதைக் கண்ணுறுவார்களா?

இப்படிக்கு,

அரசினர் கலைக்கல்லூரி
கடலூர்.

இவரால் துன்பப்பட்ட மாணவர்கள்,
முத்துசாமி, இராசேந்திரன்.

சேனாவரையர் தந்த செல்லாக் காசு

அன்புள்ள ஆசிரியருக்கு வணக்கம்.

தென்மொழி சுவடி 3 ஓலை 6-இல் (சூலை 65) புலவர். திருமேனி நாகராசன் அவர்கள் "சேனாவரையர் செய்த தவறு" எனுந் தலைப்பின் கீழ் எழுதிய கட்டுரையில் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில்,

"வடசொற் கிளவி வடவெழுத்(து) ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" (௪0௧)

எனும் நூற்பாவிற்குச் சேனுவரையர் எழுதிய உரை உண்மைக்கு மாறானதென எடுத்துக்காட்டி விளக்கியதோடு, "தமிழ்மொழி வட சொல் ஏற்றமை போலவே, வடமொழியும் தமிழ்ச்சொல் கொண்டமை யாவர்க்கும் புலனும். நிலைமை இவ்வாறாக, தமிழ்மொழி பல வடசொல் கொண்டமை ஒன்றே குறியெனக் கொள்வார் நடுநிலை பொய்த்தவ ராவர். வடகடலுந் தென்கடலும் ஆழங்கண்டுணர்ந்த சேனுவரைய ரும் வடமொழிக்குத் துணையராகித் தமிழின் வண்மையை மறைத்தது நேரியதன்றாம்" எனக்கூறியுள்ளார். பண்டை உரையாசிரியன்மார் தாம் வடமொழிக்குத் துணைபோகும் பொருட்டுப் போலியுரை செய்த னரென்றால் இற்றைத் தமிழாசிரியன்மாரும் உரையாசிரியன்மாரும் பதவி, பணம், புகழ் ஆகியவற்றில் நசைகொண்டும், குடல் நிரப்பும் தொழிலில் குறிக்கொண்டும் போலியுரை செய்து வருகின்றனர். இவ் விழிதகையர் அறிவு நிரம்பிய திருடர்கள் என வருங்கால வரலாற்றில் எழுதப்படின் வியத்தற்கில்லை.

அண்மையில் (25-5-66-இல்) தொல்காப்பியத்தின் சொல்லதி காரத்திற்கு விளக்கவுரை செய்து வெளியிட்ட திருப்பனந்தாள் செந் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் உயர்திரு.கு. சுந்தரமூர்த்தி அவர்களும் சேனுவரையர் உரையைப் பின்பற்றி மேற்கண்ட நூற்பாவிற்கு உண் மைக்கு மாறாகவே உரைத்துள்ளார். அத்தோடு நில்லாமல் அவ் வுரையை வலியுறுத்தும் பொருட்டுச் சில வரிகளைக் கூட்டி மெருகிட் டுப் போலி விளக்கம் செய்துள்ளார் எனினும் மிகையன்று.

அந்தோ! தமிழகமே! இன்னோர் பின்னே சென்று கொண்டிருக் கும் இள மாணவநெஞ்சங்களின் எதிர்கால நிலை என்ன ஆகுமோ? என எண்ணுழி நெஞ்சம் கனலவே செய்யும். ஆகவே தனித்தமிழ் ஆர்வங் கொண்டார் அனைவரும் அஞ்சாது போலியுரை செய்வார்க்கு மறுப்புரை தந்து மெய்யுணர்த்த வேண்டுகின்றேன்.

அன்புள்ள,

விராலிமலை. (திருச்சி–மா.வ) உணர்வுப்பித்தன்.

பாவேந்தர் குடும்பநலக் கொடைத் திட்டம்; மடல்கள்:

பேரன்புடையீர்! வணக்கம்.

தென்மொழி ஊட்டும் அறிவு உணவை உண்டு தெளிவுபெற்று வருபவர்களில் நானும் ஒருவன். தென்மொழிதான் என்னை ஓர் உண்மைத் தமிழனாக்கியுள்ளது என்று சொன்னால்கூட மிகையாகாது. மறைமலையடிகள் மறைந்தபின் பாவேந்தரையும் இழந்தபின் இத் தமிழ்க் குமுகாயம் என்னவாகுமோ என்றெண்ணிக் கலங்கிய எனக்கு, தமிழரிடையே இருளகற்றும் செங்கதிர்போல் நீங்கள் ஒருவர் இருக்கிறீர்கள் என்ற நினைவு ஆறுதலளிக்கிறது. நிற்க.

பாவேந்தர்தம் குடும்பநிலைபற்றித் தென்மொழியில் நீங்கள் வெளியிட்டிருந்த செய்தியறிந்து பெரிதும் கலக்கமுற்றேன். உங்கள் வேண்டுகோளை ஏற்று இவணுள்ள தமிழன்பர்களிடம் பணம் திரட்டி வருகின்றேன்; இன்றுவரை உருபா ௧௭0 திரட்டியுள்ளேன். குறைந்தது ௨௫0 உருபாவாகிலும் சேர்ந்ததும் விடுக்க விரும்புகின்றேன். உங்களுக்கு அனுப்பட்டுமா, நேரே மன்னர் மன்னனுக்கே அனுப்பி விடட்டுமா? அருள்கூர்ந்து உங்கள் விருப்பத்தைத் தெரிவிக்கவும்.

அன்பன்,

நெட்டலைநீர்-நக்கீரன், நெய்வேலி-௧.

(தென்மொழியில் குறித்துள்ளவாறு தமிழ்த்திரு. பழநியம்மாள் மேற்பார்வை மன்னர் மன்னன்......என்ற முகவரிக்கே பணத்தை விடுத்துவிட்டு மடலை மட்டும் தென்மொழிக்கு விடுக்க வேண்டுகின்றோம்)

(—ஆ-ர்)

அன்புள்ள ஆசிரியருக்கு, வணக்கம்.

மாந்தர் உருவில் திரிகின்ற எத்தனையோ கேடுகெட்ட விலங்குகள் பாழும் பணத்தைச் சேர்த்துத் தலைமுறை தலைமுறையாக ஆளும் பொழுது தமிழென்றால் அவன்-அவனே தமிழ் என இறவாப் புகழுடன் திகழும் தமிழ்ப்பாவலன் பாவேந்தனின் குடும்பம் வறுமைத் தொல்லையில் ஆழ்ந்து கிடக்கின்றது என்பதை இத்திங்கள் ஆசிரியவுரை எனக்கு அறிவுறுத்தியது.

என்போன்ற கல்லூரி மாணவர்கள் கேடுகெட்ட திரைப் படங்களுக்கென்றே எவ்வளவு பணத்தைச் செலவிடுகின்றனர்? நானே என் அறியாமையால் திரைப்படச் சாய்க்கடையில் திங்கள் ஒன்றுக்கு உருபா இரண்டைக் கொட்டி வந்ததை எண்ணி நாணுகின்றேன். இனி திரைப்படத்திற்காகச் செலவிடும் அக்காசை ஒவ்வொரு திங்களும் பாவேந்தர் குடும்பத்திற்கு அனுப்புவது என உறுதி பூண்டுள்ளேன். என்னைச் சூழ்ந்த என் நண்பர்களையும் இப்பணியில் ஈடுபடுத்துவேன்.

இந்நாள் தமிழனின் இழிந்த போக்கைக் கண்டு புண்ணாகி நிற்கும் தங்களின் உண்மைத் தமிழ் உள்ளம் இதனைக் கேட்டாவது சற்று ஆறுதல் கொள்ளாதா? என்றுதான் இம்மடலைத் தங்கட்கு எழுதத் துணிந்தேன்.

அன்பன்,

விநா. இராதாகிருட்டிணன்,

இறுதியாண்டு புள்ளியியல், அண்ணாமலை நகர்

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு, வணக்கம்.

தென்மொழியின் பாவேந்தர் நினைவிதழைக் கண்டு மகிழுவதற்கு மாறாக வருத்தமே உற்றேன். பாவேந்தரின் குடும்ப நிலையே அதற்குக் காரணியமாம்.

தமிழினத்தின் அறியாமையாலும், பகையினத்தின் இருட்டடிப்பாலும் பாரதிதாசனையும் அவர்தம் நூல்களையும் அறியாதோர் எண்ணிறந்தோர் இன்றும் உள்ளனர். தற்கால மக்களின் அறியாமையைப் போக்க உதவும் கருவிகளில் ஒன்றான 'விளம்பர'த்தின் வாயிலாய் அன்னாரின் குடும்ப அல்லல் போக்கவும் அவர்தம் நூல்களை அறிய வைக்கவும் முடிவு செய்தேன். 'இலங்கை வானொலி' மூலம் ஒரு விளம்பரத்தை ஒலிபரப்பவும் அதற்கான செலவுகளை நானும் என் நண்பர்களும் கொடுத்துவிடவும் முடிவு செய்து திரு. மன்னர் மன்னன் அவர்களின் இசைவைக் கேட்டேன். அவரோ 'தங்களைக் கலந்தபின் செய்க' என மொழிந்துள்ளார். உடனே தங்களின் முடிவைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தங்கள்

எ. ப. அருணா, எண்ணமங்கலம்.

(பயனுள்ள முயற்சி எதுவாயினும் வரவேற்கப்படும். —ஆ-ர்.)

வியத்தகு செடிகள்!

பேராசிரியர் தங்சுடன் (Professor Dunstan) என்னும் ஆங்கில அறிவியல் வல்லுநர் ஒருவர்,ஒருமுறை அமெரிக்காவின் நடுப் பகுதியில் அமைந்துள்ள காடுகளின் வழியே தம் ஆய்வுக்காகச் சென்று கொண்டிருந்தார். அவருடன் கூட அவருடைய நாயும் சென்றுகொண்டிருந்தது. சற்று நேரத்தில் திடீரென்று எழும்பிய அவருடைய நாயின் அலறல் ஓசை திடுக்கிட வைத்தது. பேராசிரியர் துணுக்குற்றார். உடனே ஒலிவந்த திசையை நோக்கி விரைந்தார். அங்கே அவர்கண்ட காட்சி அவரை வியப்பில் ஆழ்த்திவிட்டது. அஞ்சத்தக்க வகையிலே ஒரு செடி அந்த நாயைக் கவ்விப்பிடித்துக் கொண்டிருந்தது. வேறு வழியறியாது அந்நாய் அலறிக்கொண்டிருந்தது. பசைத்தன்மை பொருந்திய கரிய கொடிகள் நாயைச் சுற்றியிருந்தன. அச்செடியின் உணர்வுக்கொடுக்குகள் உதவியின்றித் துடித்துக் கொண்டிருந்த அவ்வுயிரை அழுந்தப் பற்றிக் கொண்டிருந்தன. மிகவும் முயன்று தம் நாயை அந்தச் செடியின் கொடிய கைகளிலிருந்து விடுவித்தார் பேராசிரியர். அதன்பின் சற்று நேரம்கூட அவர் அங்கே நிற்கவில்லை. அந்தப் பகுதியில் வாழும் காட்டு மக்களே

இத்தகையசெடிகளை ஆங்காங்கே வைத்திருப்பதாகப் பின்னும் அவருக்குத் தெரியவந்தது. விலங்குகளைப் பிடித்துண்ணும் இவ் வகைச் செடிகள் மக்களையும் பிடித்துக் கொள்வது உண்டாம். பேய்ச்செடியாகிய இதனைப் 'பேய்க்கண்ணி' (Devil's Noose) என்று அழைக்கிறார்கள்.

பொதுவாக உயிரினங்களுக்குச் செடிவகைகள் உணவாகப் பயன்படுகின்றன. இதுபோலவே, சிலவகைச் செடிகட்குப் பூச்சிகளும் விலங்குகளும் இரையாகிவிடுகின்றன.

பனிச்செடி (Sundew Plant or Drossera)என ஒன்று உண்டு. பூச்சிகளையும், புழுக்களையும் உயிரோடு பிடித்து இவை உண்டுவிடுகின்றன. ஐரோப்பா, வட அமெரிக்கா, ஆசுத்திரேலியா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில், சதுப்பு நிலப்பகுதிகளில் இவ் வகைச் செடிகள் காணப்படுகின்றன. பொதுவாக இச் செடியின் உயரம் அரை அடி இருக்கும். தண்டு மென்மையாகவும், பூக்கள் வெண்மையாகவும் இருக்கும். உச்சியில் பூத்திருக்கும் பூக்களின் அடிப்பகுதியில் வட்டமான வடிவில் கிளைகள் தோன்றி அவற்றில் இலைகள் காணப்படுகின்றன. இலைகளின் மேற்பரப்பில் உள்ள மெல்லிய நார்களில் ஒரு வகைச் சுரப்பிகள் உள்ளன. இவை ஒருவகைப் பசை நீரைச் சுரக்கின்றன. ஞாயிற்றின் ஒளியில் இவ்வகைப் பசைநீர் பார்ப்பதற்குப் பனித்துளிகளைப் போலத் தோற்றமளிக்கும். பூச்சிகள் இலைகளில் உட்காரும்போது இந்தப் பசைநீரில் சிக்கிக் கொள்ளுகின்றன. உடனே இலைகளில் வளர்ந்துள்ள உணர்ச்சிக் கொடுக்குகள் (Tentacles) பூச்சியைப் பற்றிக்கொள்ளுகின்றன. பூச்சி பசை நீரில் மூழ்கடிக்கப்பட்டுச் சிறிது சிறிதாக உட்கொள்ளப்படுகிறது. சிக்கிக்கொண்ட பூச்சிகள் வலிவாகத் துள்ளினால், அச் செடியில் மற்ற இலைகளும், உணர்வுக் கொடுக்குகளும் சேர்ந்து கெட்டியாக மூடிக்கொண்டு விடுகின்றன. பூச்சி முழுமையாக உட்கொள்ளப்படும் வரையிலும் அவ் விலைகள் பிரிவதில்லை.

'துருத்திச் செடி' (Bladderwort or Utricularia) என்றொரு நுண்ணிய செடிவகை குளங்களில் மிதந்துகொண்டிருக்கும். மெல்லிய, பசுமையான நூல் போன்று கொத்துக் கொத்தாக இது காட்சிதரும். இலைகளின் ஒவ்வொரு பகுதியும் சிறு சிறு பைகளாக உருவாகியிருக்கும். ஒவ்வொரு பைக்கும் ஒரு கதவு உண்டு இந்தப் 'பிடி–கதவு'

(Trap door) பையின் உட்புறமாக மடங்கியிருக்கும். இந்தக் கதவுகளின் வெளிப்புறத்தில் நுண்ணிய இழைகள் தேன்போன்ற இந்தப் பசையினுல் கவரப்பட்டு உள்ளே சென்று, பையில் சிக்கிக் கொள்ளுகின்றன. கதவு உட்புறமாக வளைந்திருப்பதால் இவ்வுயிர்கள் வெளியேற முடியாமல் சிக்கி விடுகின்றன. இப் பூச்சிகளைக் கொன்று அவற்றின் சாற்றை அருமையாக உறிஞ்சிவிடுகிறது இந்தச் செடி.

அசாம் காடுகளில் ஒருவகைச் செடிகள் நிறைந்த அளவில் காணப்படுகின்றன.

'தாழிச்செடி' (Nepenthes or pitcherplant) என்பது இதன் பெயர். இதற்கும் ஒரு 'பிடி – கதவு' உண்டு. செந்நிற இலைகள் அழகாக நிலத்தை நோக்கித் தொங்குகின்றன. இவை சிறு கொடி போல நீண்டு முனையில் நிலக்கடலை போலத் தோற்றமளிக்கும் ஒரு கூடு மேல் நோக்கி வளைந்து மேல்புறம் திறந்தபடி இருக்கும். இந்தக் கூடும் இலையின் உருவ மாறுபாடே ஆகும். இக் கூட்டின் மேல்புறத்தில் மூடியைப் போல ஒரு பிடி கதவு அமைந்திருக்கிறது. மணத்தால் கவரப்பட்ட பூச்சிகள் இக் கூட்டின் உள்ளே பறந்து செல்லுகின்றன. உள்ளே பூச்சியைக் கொல்வதற்காகவும், செரிக்கச் செய்வதற்காகவும் 'செரிமான நீர்' (Digestive fluid) அணியமாக இருக்கிறது. மறுகணமே பூச்சி கொல்லப்படுகிறது. உடனுக்குடன் கதவும் திறந்து கொள்ளுகிறது. உள்ளே சென்ற பூச்சியின் முடிவும் உள்ளேயே கணிக்கப்பட்டு விடுகிறது.

'கிடுக்கிச்செடி' (Diones) என்றொருவகைச் செடி உண்டு. இதன் இலைகள் அழகானவை. இலைகளின் ஓரங்களில் பற்களைப் போன்ற அமைப்பு, நன்கு பிணைப்பதற்கு ஏற்றவாறு அமைந்துள்ளது. ஒவ்வோர் இலையின் நடுப்பகுதியிலும் ஆறு உணர்வு இழைகள் அமைந்துள்ளன. இவற்றில் ஏதேனும் ஓர் இழை தொடப்பட்டாலும் உடனே திடீரென்று இலை மூடிக்கொள்ளும் இலை ஓரங்களில் அமைந்துள்ள பற்களும் கெட்டியாக, இறுகப் பிணைத்து, உள்ளே சிக்கிவிட்ட பூச்சியைக் கொன்று விடுகின்றன. அதன்பின் அந்தப் பூச்சி செடியால் உட்கொள்ளப்படுகிறது.

ஆப்பிரிக்காவில் 'மணந்து கொல்லி' (Araugia albens) என்றொரு செடி உள்ளது. பெரியதாக, வெண்மைநிறப் பூக்களை இது பூக்கும். இப் பூக்களுக்கு ஒருவகை இனிய மணம் உண்டு. ஒருவகைப்

பூச்சிகள் ஆவலுடன் இப்பூக்களில் நுழைந்து, தேனை உறிஞ்சுவதற்காக முயலும்போது திடீரெனத் தாக்குண்டு இச்செடியால் உட்கொள்ளப்பட்டு விடுகின்றன.

ஆசுத்திரேலியாவில் உழவர்கள் தம்முடைய பழத்தோட்டங்களில் இவ்வகைச் செடிகளைப் பயிரிடுவார்கள். பழத்தைக் கெடுக்கும் பூச்சிகளை(Fruit Destroying Moths)க் கொல்வதற்கு அவர்கள் கையாளும் வழி இது!

'கார்டிசெப்சு' (Cordyceps) என்ற செடிக்குடும்பத்தைச் சேர்ந்த செடிகளின் கதை சுவையானது. அண்மையில் ஒரு நாள் 'அக் காண்ட்சர்'(Hugh Gantzer)என்பார் எழுதியிருந்த ஒரு கட்டுரையை நான் படித்தேன். அதில் மேற்கூறிய செடியைப் பற்றிய கதை கூறப்பட்டிருந்தது.

பல ஆண்டுகளுக்கு முன்னால் பெரியவர் ஒருவர் வியப்பான ஒரு காட்சியைக் கண்டதாக எழுதினாராம். அதாவது, அவர் பாதி புழுவாகவும் பாதி செடியாகவும் உள்ள ஓர் உயிரைக் கண்டாராம். அவர் கண்டதில் வியப்பொன்றுமில்லை. மேற்குறிப்பிட்ட 'கார்டி செப்சு'வகைச் செடி ஒன்று தனது இரையான ஒரு புழுவின்மேல் வளர்ந்திருந்த நிலையையே அவர் கண்டிருக்கிறார்.

மேற்கிந்திய தீவுகளில் அடிக்கடி காணக்கூடிய காட்சி ஒன்று, குளவிகள் தம்மேல் வளர்ந்திருக்கும் செடிகளைத் தாங்கியபடி அங்கும் இங்கும் பறந்து கொண்டிருப்பது! O

தென்மொழி, கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள் நாடு	கொழும்பு	வெளி நாடு
ஆண்டுக் கட்டணம்	6 உருபா	7–25 உருபா	9 உருபா
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

—ந. பெருந்தேவன்.

மக்கள் தொகைப் பெருக்கமும் நமது பொருளியல் அமைப்பும்

தாமசு இராபர்ட்டு மால்தசு என்ற 'மரபுவழிப் (Traditional Economist) பொருளியல் வல்லுநரின் கூற்றுப்படி, "உணவு விளைச்சல் மெள்ள மெள்ளக் கூட்டுத் தொகையில் கூடிச் செல்கிறது. ஆனால் மக்கள் தொகையோ அவர்களே விரும்பி நடவடிக்கை எடுத்தா லொழிய மிகு விரைவில் பெருக்கல் முறையில் பெருகிச் செல்கிறது." (By nature human food increases in a slow arithmetical ratio; man himself increases in a quick geometrical ratio unless want and vice stop him) மால்தசின் கொள்கைகள் பல 'புதுக்கூற்றுப் (Modern economist) பொருளியலாரால்' எதிர்க்கப் பட்டபோதிலும், இக்கட்டுரையில் விளக்கப் போகும் உண்மைகட்காக, மால்தசின் மேற்கோளை அடித்தளமாக அமைத்து அதன்மேல் சில கருத்துகளை எழுப்பவிருக்கின்றேன்.

நம் நாட்டில் மக்கள் தொகை பெருகி வருகிறது. இஃது உண்மை தான்! 'அதனால்தான் நாட்டு மக்கள் உணவு, உடையின்றித் துன் புறுகிறார்கள் என்று கூறுவது முழு உண்மையன்று. நம் நாட்டில்

மக்கள் தொகை பெருகிய அளவிற்கு உணவு உற்பத்தி பெருகாததும் உண்மைதான்! அதனால்தான் நாட்டு மக்கள் பசியாலும் பட்டினியாலும் துன்புறுகின்றார்கள் என்று கூறுவதும் ஓரளவே சரியானது. பின் எதனால்தான் நாட்டு மக்கள் துன்புறுகிறார்கள் என இனி எண்ணிப் பார்ப்போம்.

தற்போது நமது கடமை மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைப்பதா அல்லது உணவு உற்பத்தியைப் பெருக்குவதா? பலர் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க வேண்டும் என்பர். அதை விட உழைக்காதுண்போர் தொகையைக் குறைக்க வேண்டுவதே நமது முதல் கடமை. உருசிய நாட்டு அரசியல் அமைப்பின்படி உழைக்காதவன் உண்ணா நோன்பே கைக்கொள்ள வேண்டும். உண்ணா நோன்பென்றுரைத்து ஊரை ஏமாற்ற முடியாது அங்கே! தற்போது நம் நாட்டில் உழைப்போர் தொகை குறைந்தும், மக்கள் தொகை நிறைந்தும் வருகிறது. தக்க வழிகளை மேற்கொண்டால் மக்கள் தொகைப் பெருக்கம் நாட்டிற்கு நலன் பயக்கும் என்பதையே சான்றுடன் நிறுவ விழைகிறேன்.

மக்கள் தொகை பெருகப் பெருகப் பெரிய பெரிய கருவிகளின் உதவியை நாடாது நாமே உடலால் உழைத்துத் தொழில் நடத்தலாம். ஆகையால் நாம் வெளி நாட்டிலிருந்து கடனாகவோ அல்லது காசு கொடுத்தோ பல கருவிகளை வாங்குவது தேவையற்றதே; அது நமது சோம்பலையும் உடல் வளையா உளத் திமிரையுமே காட்டுகின்றது. அதற்கு இதோ ஒரு சான்று—

கைக்குத்தல் அரிசி:— இதனால் உடலிற்கு நன்மை இருப்பதை நோக்குவதோடு ஈண்டுப் பொருளியல் நன்மையையும் நோக்குவோம். இஃது உடலுழைப்பை வேண்டுகிறது. இதனால் முன்பு எவ்வளவு மக்கள் வேலை பெற்று வந்தனர். இப்போது நாம் மேலை நாட்டைப் பார்த்து மின் கருவிகளை வைத்துக் கொள்வதால் அத்தனை மக்களும் வேலையின்றித் திண்டாடுவர். வேலையில்லாமல் இருந்தால் மக்கள் அறிவின் நாட்டம் தீச்செயல் வேட்டலாகிவிடும். அறிஞர் பலர் ஏற்றுக் கொண்டதோர் உண்மை இது. ஆகையால் தான் மக்கள் தொகைப் பெருக்கம் கேடு விளைப்பதைவிட, உழைப்போர் தொகைச் சுருக்கமே கேடு விளைப்பதாகும்! மேலை நாட்டைப் பார்த்து உழவுத் துறையில்கூடக் கருவிகளின் உதவியை நாடுவது இந்திய 'உழவுத்

துறைப்பொருளியல் அமைப்'(Agricultural economic structure) பிற்கு ஒவ்வாதது. ஏனெனில் இன்று நேர்மையான வேலை கிடைக்காதவர்கள் குறுக்கு வழியில் பொருளீட்ட முனைகின்ற ஒரு சீர் கேடான நிலை இருந்து வருகிறது. நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்களை உழவுத் துறையில் ஊக்குவிக்க வேண்டும். 'உழைப்பவனுக்கே நிலம் (Peasant Proprietorship) உரிமை' என்ற நாள் வரும் வரை, செல்வர்களிடம் சேர்ந்துள்ள அளவுக்கு மீறிய செல்வம் ஏழைகள் கைக்கு வராததோடு நாட்டிலே'மக்களாட்சி(Democratic socialism) வழிநின்ற நிகரமை மறைந்து 'தடியாட்சி(Autocratic Capitalism) வழிநின்ற தனியுடைமை' வந்துவிடும். தனியுடைமை(Capitalism)க் கொள்கைக்கெனக் கட்சி தொடங்கிய இராசகோபாலனைப் பின்பற்றும் பார்ப்பன அடிவருடிகள் இதை உணர வேண்டும்.

உடலுழைப்பை எல்லாரும் எப்படிக் கைக்கொள்வது என்கின்றீர்களா? பார்ப்பனன் வயலில் இறங்கி உழைப்பானா? 'தாழ்த்தப்பட்ட(சூத்திர)மக்கள்' தாமே உழைக்க வேண்டும்? என்கின்றீர்களா? இந்நாட்டில் உள்ள ஒவ்வொருவனும் ஆண்டியாயினும் அரசனாயினும் உடலை வளைத்து உழைக்க வேண்டும். அறிவுழைப்பைச் செய்கிறானே! அவனுமா உழைக்கவேண்டும் என்கின்றீர்களா? அறிஞர் ஒருசிலர்தாம் நாட்டில் இருக்க முடியும். ஆகையால் அறிவுழைப்பு என்று கூறியே உடலுழைப்பை ஒதுக்கி ஊரை ஏமாற்றலாம் என நினைப்பவர் எல்லாரையும் சிறையில் அடைக்க வேண்டும்! செக்கிழுக்கச் சொல்லவேண்டும்! செய்யவில்லையென்றால் சவுக்கடி கொடுக்க வேண்டும்! ஆகவே மக்கள்தொகைப் பெருக்கமன்று நாட்டை வாட்டுவது! உழைப்போர் தொகைச் சுருக்கமே இன்று நாட்டை வாட்டி வருவது என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

உழைப்போர் தொகைச் சுருக்கத்தை மாற்றினால், வயலில் இறங்கி உழைப்பார்களே பலர். பின் உணவு உற்பத்தி பெருகுமே! பின்னர் நாம் மேன்மேலும் உழைப்போர் தொகைப் பெருக்கத்தை ஊக்குவிப்பதன் வழி, வெளி நாடுகளிடம் உதவியை நாடி ஏங்கும் இரங்கத்தக்க நிலையைச் சிறிது சிறிதாகப் போக்கிக் கொள்ளலாம். ஆனால் இன்று உடலுழைப்பிற்கு மாறாகக் கருவியைப் பயன்படுத்தி வரும் நிலையினும் சீர்கேடான —அறிவுழைப்பிற்கு மாறாகக் கருவியைப் பயன்படுத்தும் —நிலை ஏற்பட்டுள்ளது. இந்தியத் தொழிற்

சாலைகள் பல 'வரவு செலவுக் கணக்கு' போன்றவற்றிற்குக்கூட மின் கருவி(Computers)களைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. மேலை நாட்டைப்பார்த்து எல்லாவற்றையும் பின்பற்றுவது எவ்வளவு பெரிய தவறு என்பதை நாம் இன்னும் உணரவில்லை. உணரும் நாளும் சேய்மையில் இல்லை.

மேலைநாட்டுப் பொருளியல் கொள்கைகளினின்று கொள்ளுவன கொண்டும் தள்ளுவன தள்ளியும் வாழாது, தள்ளுவன கொண்டும் கொள்ளுவன தள்ளியும்வாழ முயற்சிசெய்வதன் விளைவும் தெரிந்துவிடும் சின்னாளில். மேலைநாட்டாரை மேலோட்டமாகப் பார்த்துப் பின்பற்றும் பேதையரின் பேதைமையும் புரிந்துவிடும். நம் நாட்டுப் பெரியோர் களின் கொள்கைகளைப் பின்பற்றி வாழ முயற்சி செய்யாது, அவர்களை வாயளவில் வாழ்த்திவிட்டுச் செயலளவில் தன்னலமும், தந்நலமும் ததும்பும் தரக்குறைவில் தன்னை ஈடுபடுத்துவதோடு நில்லாது பிறரை யும் அதற்குப் பயன்படுத்தும் கொடுமை அனைவருக்கும் தெரியும் நாள் சேய்மையில் இல்லை. O

தென்மொழி அன்பர்கள் கவனிக்க . . .

கடந்த மாதத் தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்கள் சுணக்க மாகவே வெளிவந்தன. காரணம் முகவர்களின் ஒத்துழைப்பின்மையே.

தென்மொழிக்கு முன்பணம் (பொறுப்புத் தொகை) செலுத்திய முகவர்களும் தேவையான படிகட்கு உரிய பணத்தைக் கழிவு நீக்கி விடுத்து ஒவ்வொரு மாதமும் இதழ்களைப் பெற்றுக் கொள்ளும் முகவர் களும் இருக்கிறார்கள்.

இதழ் அணியமானதும் முகவர் அனைவர்க்கும் நினைவூட்டறிக்கை கள் அனுப்பப் பெறுகின்றன. அவற்றைக் கண்ணுற்ற பின்னரும முகவர் பலர் பட்டியல் பணத்தை விடுப்பதில்லை ஏதேனும் சாக்குப் போக்குச் சொல்லிக் காலம் தாழ்த்துகின்றனர். அன்பர்களின் உணர்வு களுக்கு முகாமை கொடுத்துச் சிற்சிலகால் முகவர் சிலருக்கு இதழ்கள் முற்கூட்டியே விடுக்கப் பெறினும் அடுத்தடுத்த பட்டியல்களுக்குச் சரி வரப பணம அனுப்புவதில்லை.

முகவர் வாயிலாய் இதழ்களைப் பெற்று வரும் அன்பர்கள் தத்தம் முகவாகளை அணுகித் தக்கவாறு அறிவுறுத்த வேண்டுகின்றோம். முகவர் இல்லாத ஊர்களில் புதிய, நாணயப் பொறுப்பு வாய்ந்த முகவர்களையும ஏற்பாடு செய்ய வேண்டுகின்றோம்.

இனி, ஒழுங்காக இயங்கிவரும் முகவர்களும் தொடர்ந்து எங்க ளோடு ஒத்துழைத்து இத் தண்டமிழ்ப் பணிக்குப் பெருமை சேர்க்க வேண்டுகின்றோம்.

–அமைச்சர்.

ம. இலெ. தங்கப்பா.

தமிழகத்தின் புதிய அமைச்சரவை செய்ய வேண்டுவன.

தமிழகத்தில் புதிய ஆட்சி மலர்ந்துள்ளது. ஆட்சியில் அமர்ந்துள்ளவர்கட்கு நல்ல வாய்ப்பு இது. ஆயினும் சிறப்பும் சிறப்பின்மையும் அவ்வாய்ப்பினை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளும் முறையினைப் பொறுத்ததே. ஓரமைச்சரவை போய் வேறோர் அமைச்சரவை வந்தது என்ற அளவில் வழக்கமான வேலைகளில் மட்டும் ஆட்சியாளர் கவனம் செலுத்தினால் போதாது. மக்களின் அன்றாடத் தேவைகள், விலை ஏற்ற இறக்கங்கள், தொழில் முன்னேற்றம், பொருளியல் திட்டங்கள் போன்றவை அனைத்து ஆட்சிகளுக்கும் பொதுவான செய்திகளே. மொழி, பண்பாட்டுத் துறைகளில் தமிழர்க்குச் செய்யப்பட வேண்டிய உண்மை நலன்கள் எத்தனையோ உள. அவையே இவ்வாட்சியாளர் சிறப்பாக மேற்கொள்ள வேண்டியவை. இத் துறைகளில்தாம் இது வரை தமிழகம் வடவராலும், அவர்தம் வால்பிடிக்கும் பேராயக் கட்சி ஆட்சியாலும் அடிமைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. இத்துறைகளில் தமிழரின் அடிமைத்தனத்தை நீக்கித் தலை நிமிர்ந்து நிற்கச் செய்வதே ஆளுங்கட்சியின் தலையாய கடமை என்போம். இக் கடமையை அவர்கள் சிறப்புற ஆற்றுதல் வேண்டிக் கீழ்க்கண்ட கருத்துரைகளை அவர்கட்கு வழங்க விரும்புகின்றோம்.

* இந்திச் செய்தியில் ''வழ வழா, கொழ கொழா''க் கொள்கை களை விட்டொழித்தல் வேண்டும். எக் காரணத்தாலும் இந்தி ஆட்சி மொழி என்ற பெயரால் தமிழகத்துக்குள் நுழைதல் கூடாது. நடுவண் அரசோடு கொள்ளும் தொடர்புகள் அனைத்தும் ஆங்கிலத்தில் மட்டுமே இருத்தல் வேண்டும். மும்மொழித்திட்டம் மறைமுக இந்தித் திணிப் புக் கான சூழ்ச்சியேயாம். அது கூடாது. இந்திக்கு என்ன அலுவல் பெயர் வேண்டுமானாலும் நடுவண் அரசு வைத்துக் கொள்ளட்டும். இந்தி இந்தியப் பேரரசின் ''முதன்மைப் பொது மொழி'' என்று வேண்டுமானாலும் வழங்கப் பெறட்டும். ஆங்கிலத்தைத் ''துணைப் பொது மொழி'' என்று அழைத்துக் கொண்டாலும் சரியே. ஆனல் தமிழகத்தைப் பொறுத்தவரை நடுவணரசுத் தொடர்பு மொழி ஆங்கிலமாகத்தான் இருக்கும் என்பதை நடுவணரசிற்கு வற்புறுத்தி வெற்றி காணல் வேண்டும். மறைமுகமான கட்டாயத்துக்குரிய எந்தத் திட்டத்தையும் ''விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை'' என்ற பெயரால் தமிழக அரசு ஏற்றுக்கொள்வது கூடாது. சுருங்கக் கூறின் தமிழக ஆட்சி, அரசியல் வினைப்பாடுகளில் இந்திக்குக் கடுகளவு தேவையும் நேர்தல் கூடாது.

* இன்றைய தமிழக வானொலிநிலையங்கள் பார்ப்பனர்க்கும் போலித் தமிழர்க்கும் புகலிடங்களாக உள்ளன. அவற்றைத் தமிழர்க்குஉண்மைப் பயன் தருவனவாக மாற்றி அமைத்தல் வேண்டும். ''ஆகாச வாணி'' யில் தொடங்கித் தமிழ் மரபுக்கும், தமிழர் மானத்துக்கும் பொருந்தாத பல சொற்கள் நிகழ்ச்சித் தலைப்புகளில் கட்டுப்பாடாகப் பயன்படுத்தப் பெற்று வருகின்றன. வானொலித் துறை நடுவணரசுக்குரியதாக இருப்பினும் வானொலி, மொழி வளர்ச்சிக்கும் பண்பாட்டுக்குமுரிய சிறந்த கருவியாதலால், அவற்றின் நலங்கருதி அத்துறையில் தலை யிடத் தமிழக அரசுக்கு உரிமையும் உரிய பங்கும் உண்டு. ஆங்கில மொழியைப் பிழையின்றி ஒலிக்கவும், பலுக்கவும் மரபு வழுவாத மொழிச் சிறப்பை அறிந்து கொள்ளவும் வேண்டுமாயின் பிரித்தானிய ஒலிபரப்பைக் (B. B. C) கேட்கவேண்டும் என்று சொல்லுவர். வேறு பல நாடுகளிலும் வானொலியே மொழிச் செப்பத்துக்கு நிலைக்களனாக வுள்ளது. ஆனல் தமிழகத்தில் மட்டும் மொழியின் தரக்குறைவுக்கும் கீழ்மைக்கும் இழிமட்டத்துக்கும் எடுத்துக்காட்டாக வானொலி நிலையங் கள் உள்ளன. இந் நிலையை மாற்றி அமைக்க வேண்டுவது தமிழக ஆட்சியின் கடமையாகும். முதலில் ''ஆகாசவாணியின் மதராசு அல்லது திருச்சி வானொலி நிலையம்'' என்று கூறும் இழி நிலையை

அகற்றுதல் வேண்டும். அனைத்திந்திய வானொலியின் தமிழகப் பிரிவு என்று சொன்னால் என்ன கெட்டுவிடும். ஆகாசவாணி என்பது என்ன அப்படி மாற்ற முடியாத பெயரா? ஆங்கிலத்தில் கூறும் பொழுது மட்டும் All India Radio என்று கூறப்படுகின்றதே! இதனை நடுவணரசின் திமிர் பிடித்த மர மண்டையில் ஏற்றி ஆகாசவாணியை மாற்றியே ஆக வேண்டும். அதோடு, தமிழக ஆட்சி, தனக்குள்ள மொழிக்காப்புரிமையைக் கொண்டு வானொலியை நல்ல தமிழ் வழங்குமிடமாக, நல்ல தமிழைக் கற்பிக்கும் இடமாகச் செய்வதில் தங்கள் பங்கினை ஆற்ற வேண்டும். எது நல்லதமிழ் என்பதைப் பற்றிக் கழகம் தன்கட்சி உறுப்பினர்களின் கருத்தை மட்டுமே கொண்டுவிடாமல், உண்மைத் தமிழறிஞர்களின் கருத்தினைக் கேட்டு நடக்க.

* இந்நிலையோடு தொடர்பாக முதலில் மொழிநூல் பேரறிஞரும், தமிழ் மொழியியல் துறையைப் பொறுத்தவரை உலக முழுவதிலும் ஒரே வல்லுநரும், கருத்ததிகாரியும் (Authority) உண்மைத் தமிழ்த் தொண்டரும், உண்மையைக் கூறுவதாலேயே இதுவரை வேலையையும் அரசினரின் கண்ணோட்டத்தையும் இழந்து நலிந்திருப்பவருமான தேவநேயப் பாவாணர் அவர்களை உடனடியாக அரசினர் ஓர் உயர்ந்த மொழிநலம் பேணும் பதவியில் அமர்த்திப் பாராட்டுவதோடு பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டும். தமிழகப் பல்கலைக் கழகத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராகவோ, அன்றித் தமிழக அரசின் மொழித்துறைத் தலைமை அறிவுரையாளராகவோ (Chief Advisor to the Govt. on Language) அவரை அமர்த்த வேண்டுகின்றோம். இதனைப் பாவாணர் மேலுள்ள தனிப்பற்றாலோ அன்பாலோ கூறவில்லை. அவரின் மொழியியல் பண்பாட்டியல் அறிவின் ஆழத்தையும், சிறிதாவும் போலிமை கலவாத அவர்தம் உண்மைத் தமிழன்பையும் அவரைக் கொண்டு மொழித்துறையில் அரசினர் எத்துணைப் பெருவேலைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்பதை எண்ணியுமே இதனைக் கூறுகின்றோம். அதோடு பாவாணர் அவர்கள் தலைமையில் கா. அப்பாதுரையார், கீ. இராமலிங்கனார், இலக்குவனார் ஆகியோரையும் ஒன்று கூட்டி ஒரு மொழித்துறை அறிவுரைக் குழுவையும் அமைத்தல் வேண்டும். அக்குழுவின் வாயிலாகச் செய்ய வேண்டுவன:

(1) தற்பொழுதைய சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகரமுதலியின் சீர் கேட்டினை நீக்கிச் செப்பம் செய்வித்தல்.

(2) தமிழ் மொழியில் இலக்கியத்திலும், மக்கள் வழக்கிலும் பயி லும் இலக்கக் கணக்கான தனித் தமிழ்ச் சொற்களைத் திரட்டியும் செப்பம் செய்தும் தொகுத்தும் வகுத்தும், கருத்தாணை வாய்ந்த, வரை யறையான ஓர் அரும் பெருந் தமிழ் அகர முதலியை (Authoritative Standard Dictionary of the Tamil language) உருவாக்குதல்.

(3) தமிழை ஆட்சி மொழியாகவும் பாடமொழியாகவும் கொள்வ தால் ஏற்படும் புதியசொல் தேவைகளை நிரப்புதற்காக ஆட்சி, அறி வியல் கலைச்சொல் புத்தாக்கத்தினைச் செப்பமுறவும் விரிவாகவும் வரை யறை வாய்ந்ததாகவும் நிலைப்பாடாகவும் செய்வதற்குச் சரியான துணைக் குழு ஒன்றினை அமைத்தல்.

(புத்தாக்க நூற்கள் தமிழில் வெளிவருங்கால் அவற்றில் பயன் படும் கலைச்சொற்கள் ஆசிரியர்க்காசிரியர் வேறுபட்டு மக்களைக் குழப் பாமல் இருப்பதற்காக அவற்றைச் சரிபார்த்துத் திருத்தி வரையறுக் கும் உரிமையும் மேற்படி குழுவிற்கு இருத்தல் வேண்டும்.)

* இனி, பாவாணரின் முப்பதுக்கு மேற்பட்ட ஆராய்ச்சி நூற் களையும் வெளியிடுதற்கு அரசினர் ஊக்கமளித்தல் வேண்டும்.

* பாரதிதாசனின் சிறந்த பாடல்களைப் பள்ளிப் பாடநூற்களில் சேர்த்துக் கொள்வதை மேலும் ஊக்குவித்தல் வேண்டும்.

* சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் மொழி ஆய்வுத் துறைகளை மொழித்துறை அறிவுரைக் குழுவின் அறி வுரைக்கேற்பத் திருத்திச் செப்பம் செய்தல் வேண்டும்.

* தமிழ்க் கல்விக்குப் பல்லாற்றானும் மதிப்பும் பெருமையும் ஏற் படுதற்கு அரசினர் ஆவனசெய்தல் வேண்டும். அதற்கு, ஆங்கிலத்தை நடுவாகக் கொண்டுள்ள இக்காலக் கல்வி முறையை முற்றிலும் மாற் றித் தமிழை நடுவாகக் கொண்ட புதிய கல்வித் திட்டத்தை உருவாக்கல் வேண்டும். தமிழகப் பள்ளிகளில் குறிப்பிட்ட ஒருசில ஆசிரியர்கள்தாம் தமிழைப் பயிற்ற முடியும் என்பது நம் கல்விக்கு இழுக்கானது. ஆசிரியர் அனைவர்க்கும் தாய்மொழியைப் பயிற்றும் ஆற்றலும் அறிவும் கட்டாயமாக இருத்தல் வேண்டும். தமிழ்ப்பாடத் திட்டத்தைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மேலும் ஆழமாக்கி இயல்புநிலைக் கல்வியிலேயே தமிழறிவு பெருகுதற்கு ஆவன செய்தல் வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர் பதவிகளை ஒழித்தல்

வேண்டும். ஆங்கிலத்துக்குத் தான் இனிச் சிறப்பாசிரியர்கள் (English Pandits) தேவையே யன்றித் தாய் மொழியாகிய தமிழுக் கன்று. அதன் தொடர்பாக ஆங்கிலத்துக்கு வேண்டுமானால் இனித் தனிக் கல்லூரிகள் அமைத்துக் கொள்ளலாம். இச் சீர்திருத்தம் உடனடியாக மேற்கொள்ளப் பெறுவதன்று. படிப்படியாகச் செய்யப்பட வேண்டுவது. ஆயினும் மிக இன்றியமையாதது.

* பழந்தமிழ் நாகரிகத்தினையும் வரலாற்றினையும் பற்றிய உண்மைகளை வெளிப்படுத்தும் புதைபொருள் ஆராய்ச்சி தற்பொழுது தமிழகத்தில் நடைபெறவில்லை என்றும், வேண்டுமென்றே புறக்கணிக்கப் படுகின்ற தென்றும் அறிகின்றோம். புதிய ஆட்சி, புதைபொருள் ஆராய்ச்சிக் கழகத்தைச் செயற்பட வைத்து, அதன் வேலைகட்கு ஊக்கமும் உதவியும் அளித்துப் பழந்தமிழ் நாகரிகச் சான்றுகள் மறைந்து கிடக்கும் இடங்களைத் தோண்டி ஆராயச் செய்தல் வேண்டும்.

* தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தில் தமிழ்ச் சுவடிகள் வேண்டுமென்றே இருட்டடிக்கப்பட்டுக் கிடக்க, வடமொழியின் ஆக்கத்துக்கான வேலைகளே மேற்கொள்ளப்படுகின்றன. அரசினர் தக்க ஆய்வாளரை அமர்த்தித் தமிழ்ச்சுவடிகளை ஆராய்ந்து பயனுள்ளவற்றை வெளியிட ஆவன செய்தல் வேண்டும்.

* தமிழ்ப் பகைவர்கள் பலர் தமிழ் உருவில், தமிழ்ப் பெயரில் ஆங்காங்குப் புகுந்து கொண்டு அரசினர் துணைக்கொண்டு தமிழரின் பணத்தை உறிஞ்சித் தமிழரின் உண்மை நலனுக்கு மாறான பல செயல்களைச் செய்து கொண்டு, அதே பொழுது தமிழ்த் தொண்டர் என்ற பெயரையும், புகழையும் பரிசில்களையும் பெற்று வருகின்றனர். எடுத்துக்காட்டாக, தமிழில் அரசினர் உதவியொடு வெளிவந்துள்ள 'கலைக்களஞ்சிய' வேலைகளைக் குறிப்பிடலாம். இதன் அடியில் புதைந்து கிடக்கும் சூழ்ச்சியும் குறும்பும் அனைவர்க்கும் தெரியாது. மற்றும் இக் கும்பலே மீண்டும் சிறுவர் கலைக்களஞ்சியம் தொகுக்கும் வேலையையும் மேற் கொண்டுள்ளதாக அறிகின்றோம். இவ்வாறு தமிழ்த் தொண்டின் பெயராலேயே தமிழ்க்குத் தீங்கு நடப்பதை அரசினர் அறிந்து தக்கவகையில் அதனைக் கண்காணித்து நலஞ் செய்தல் வேண்டும். தமிழ் மொழியைப் பற்றிய எந்த வேலையும் இனி, முதலிற் குறிப்பிட்ட மொழித்துறைக் குழுவின் பொறுப்பில் ஒப்படைக்கப்படுவதே பொருந்துவதாகும்.

* தமிழ் எழுத்தாளர் என்ற பெயரால் தமிழ்ப் பகைவர்கள் ஒன்று சேர்ந்து கொண்டு தாங்கள் எழுதுவதே தமிழ் என்று விளம்பரப் படுத்துவதுடன் வெளிநாட்டாரையும் நம்பவைத்து விடுகின்றனர். அவர்வழியாலன்றி, உண்மைத் தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் இத்தகையன என வெளி நாட்டுத் தமிழன்பர்க்குக் காட்டுதற்குச் சரியானதொரு வழியை அரசினர் மேற்கொள்ள வேண்டும். இந் நிலையில் ஆளும் கட்சியின் தலையாய எழுத்தாளர்கள் எழுதுவதே உண்மைத் தமிழ் என்று கருதும் பிழையினை அரசினர் மேற்கொண்டு விடாமல் உண்மைத் தமிழறிஞர்களை ஆங்காங்குத் தேடிப்பிடித்து அவர்வாயிலாய் இதனைச் செய்தல் வெண்டும்.

தொழில் துறையில், கோவைத் தொழிலறிஞர் கோ. துரைசாமி (G.D. Naidu) அவர்களே இன்று தமிழகத்தில் தலை நிற்பவர். பேராயக் கட்சிப் பணமுதலைகள், வடநாட்டு முதலாளிகள் ஆகியோரின் அழுத்தத்தால் அமுக்கப்பட்டுக் கிடக்கும் அவரின் பல்துறைத் தொழிலறிவு தமிழகத்துக்குப் பயனளித்தல் வேண்டுமாயின் புதிய அரசு துணிவாக அவருக்குப் பல உதவிகளை அளிக்க முன்வரல் வேண்டும். தமிழக அரசால் நேர்மையான ஆனல் துணிவான முறையில் அவருக்கு எவ்வளவு உரிமையும், சலுகையும் உதவியும் அளிக்க முடியுமோ அவ்வளவையும் அளித்துத் தமிழகத்தின் தொழில், வேளாண்மை அறிவியல் முன்னேற்றத்தைப் பெருக்கிக் கொள்ளல் வேண்டும். இதுவும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியதே.

* 'தமிழக அரசு' என்ற பெயரைப் பலகைகளில் எழுதுவதோடு அமைந்து விடாமல் அரசினர் பதிவுகளிலும் அரசியல் சட்டத்திலும் இனித் 'தமிழகம்' என்ற பெயரே வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசினர் உறுதியாக மேற்கொள்ள வேண்டும்.

* தமிழகக் கடைத் தெருக்களின் பெயர்ப் பலகைகள் விளம்பரப் பலகைகள் தமிழிலேயே எழுதப்பட அரசினர் ஆணை பிறப்பித்தல் வேண்டும். விரும்புபவர்கள் ஆங்கிலத்திலும் அல்லது வேறு மொழியிலும் எழுதிக் கொள்ளலாம். ஆயினும் ஒவ்வொரு பலகையிலும் தமிழ் கட்டாயமாக இடம் பெறல் வேண்டும்.

(48-ஆம் பக்கம் பார்க்க)

பாவேந்தர் குடும்ப நலக் கொடைத் திட்டம்.

செல்வம் மிகுந்த நாடு தமிழ்நாடு. பாண்டியன் அளந்த முத்து, சேரன் நிறுத்த யானை மருப்பு, சோழன் அமைத்த நெற்களஞ்சியம் என்றெல்லாம் இலக்கியம் பாடிய தமிழ்ப் புலவர் வழிவந்த இத் தண்டமிழ்ப் பாவலர்க்கு நாம் கடமை செய்யத் தவறினோம். பெண்டிர் நலம் பற்றித் தூது, உலா, மடல், வாயில் என்று பலப்பல காமக் கழி நிலை நூல்களைப் பாடுவதையே தம் தொழிலாகக் கொண்ட இழிநிலைப் பாவலர்கள் போல் அன்றி, குமுகாயப் புரட்சிக்கே வித்திட்ட இப் புதுமைப் புலவனுக்கு, தமிழ் அன்னைக்குத் தலைமகனாகி அளப்பரிய தொண்டாற்றிய இப்புலவர் மணிக்கு—நாம் இதையும் செய்யாமற் போவோமானால் நமக்கு எதிர்காலத்தே வரும் இழிவைத் தாங்கிக் கொள்ள நெஞ்சு போதாது.

நாம் செய்து முடிக்கின்ற வினையாற்றலில் நாட்டத்தை வைப்போம். ஆங்காங்கே உள்ள தமிழ்க் கழகங்கள், மன்றங்கள், கல்வியமைப்புகள், புலவர் குழுக்கள், தமிழன்பர்கள் எல்லாரும் தம் தம் சார்பில் தங்களால் இயன்ற அளவு பொருள் திரட்டிப் புதுவையில் உழன்று கொண்டிருக்கும் பாவேந்தர் தம் குடும்பத்திற்கு விடுத்தல்

வேண்டும் என்று பல்லாற்றானும் வேண்டிக் கொள்கின்றோம். தாங்கள் தொகுக்கின்ற பொருளை தமிழ்த்திரு. பழநியம்மாள், மேற்பார்வை மன்னர் மன்னன், 95, பெருமாள்கோவில் தெரு, புதுவை-1. என்ற முகவரிக்கு விடுத்துவிட்டு, அத்தொகுப்புப் பட்டியலைத் தென் மொழிக்கு விடுக்க வேண்டுகின்றோம்.பட்டியல் தென்மொழியில்வரும். அனுப்பப் பெறுகையில் இது பாவேந்தருக்குச் செய்யும் நன்றிக்கடன்; தென்மொழி அன்பர்கள் சார்பில் விடுக்கப் பெற்றது, என்றும் குறிப் பிடும்படி கேட்டுக் கொள்கின்றோம். ஒவ்வொரு நாளும் எத்தனையோ துறைகளில் எத்தனையோ உருபாக்களைச் செலவு செய்கின்றோம். இவ் வழி நாம் அளவில் ஒவ்வொருவரும் குறைந்தது ஓர் உருபா செலவிடு வதால் நம் நிலைக்குக் குறைவும் ஏற்பட்டுவிடாது; இழுக்கும் அன்று. மாறாக நம் தலைமுறையில் வாழ்ந்த தலைசிறந்த பாவலர் ஒருவர்க்கு நாமும் நன்றி காட்டினோம் என்ற மனநிறைவும், பெருமிதமும் ஏற்படும் என்பது உண்மை.

தென்மொழிச்சார்பில் அன்பர்கள் இதுபோன்ற அறக்கொடைகள் வழங்க வேண்டிக்கொள்வது இது மூன்றாவது முறை. பொருளியல் தொல்லை மிகுந்த இக்காலத்தும் எந்தமிழ் அன்பர்களை இவ்வாறு தூண்டுவது, தங்களுக்குள்ள கடமையுணர்வுகளில் தாங்கள் ஒரு சிறு அளவிலாகிலும் ஈடுபாடு கொள்ளுதல் வேண்டும் என்ற அறவுணர்வு பற்றியே. இவ்வேண்டுகோளுக்கு உளமும் உழைப்பும் நல்க வேண் டும் என்று கேட்டுக்கொள்வதுடன், இக்கடமைச் சுமையை உங்கள் மீது சுமத்தியமைக்கு நம்மைப் பொறுத்தருளுமாறும் வேண்டிக் கொள்ளுகின்றோம். பெருஞ்சித்திரன்.

(46-ஆம் பக்கத் தொடர்ச்சி)

* புகைவண்டி, அஞ்சல் துறைகளில் தமிழ்க் கொலை நடப்பதை அரசினர் கண்டித்துத் திருத்தல் வேண்டும். நடுவணரசுத்துறை எந்தத் துறையில் தமிழைப் பயன்படுத்துமாயினும் அது தமிழர் அர சினைக் கலந்து அவர் வழி சரியான தமிழை அறிந்து கொள்வதற்கு வழி வகுத்தல் வேண்டும்.

* டால்மியா புரத்தைக் ''கல்லக்குடி''யாக மாற்றல், அரசர் அண்ணாமலைபுரம், ஆர். ஏ. புரமாகி, இன்று 'ஆரியபுர' மாக்கப்பட்டு வருவது, தியாகராயநகர் தி.நகர் ஆக்கப்பட்டிருப்பது போன்ற 'சிண்டு' வேலைகள் வளரவிடாது அறுத்தெறிதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். O

—மணிவேலன்—

மேடைத் தமிழ் !

மேடையிலே அரசியலை வெள்ளத்தின் ஓட்டமென
விரைந்து பேசும்
கோடையிடிக் குரல் கொண்டீர்! உம்காதை என்பக்கம்
கொஞ்சம் சாய்ப்பீர் !
கூடையிலே மாம்பழத்தின் குவியலிடை அழுகலினைக்
கூட்டி வைத்தால்
கேடுவரும் என்பதனை யறியீரோ? பிறமொழிச்சொல்
கூட்டல் என்னே ?

'சிக்கல்'எனச் சொல்வதிலே சிக்கலென்ன வந்ததுவோ?
திக்கு வாயன்
விக்கல்வந்த போதினிலே பேசல்போல் 'பிரச்னை'யென
விளாசு கின்றீர் !
'சர்க்கா'ரை விட்டொழித்தே 'அரசெ'ன்று பேசிடுவீர் !
தமிழ்த்தேன் தன்னைத்
திக்கிடும்வாய் உண்டாலும் நாப்பழக்கம் சரியாகும் !
தெரியீர் போலும் !

‘தார்மீகப் பாதை’யென வாய்கசக்கப் பேசுவதால்
தமிழைக் கொன்றீர்!
வேர்கெடுக்கும் வேலையிது! ‘அறநெறி’யென் றேன்சொல்ல
விழைய மாட்டீர்?
மார்தட்டி ‘யாம்தமிழர்!’ எனப்பேசிப் பொழுதையெலாம்
மாய்த்தல் நன்றே?
கூர்முள்ளாய்ப் பிறமொழிச்சொல் தமிழ் வழியில்
குவியாமல் அகற்றல் வேண்டும்!

ஆடையிலே தீவைத்துக் கொண்டதன்பின் ஒருசிறிதும்
அச்ச மின்றி
ஓடிவந்து வீட்டினிலே நுழைந்தாலே நம்மோடு
வீட்டி லுள்ளார்
‘பாடையிலே போவதற்கே’ வழிகூட்டும் என்கின்ற
பான்மை கண்டும்
மேடையிலே பிறமொழிச்சொல் பேசுவதைப் படிப்படியாய்
விரட்ட மாட்டீர்!

‘கண்கூடெ’ன் றுரைத்தாலே கண்ணவிந்து போய்விடுமோ?
கைப்பி டித்த
பெண்கூடா தெனவிலக்கி விலைமகளைக் கூடுவதில்
பெருமை என்னே?
மண்விழுமே உம்வாயில் ‘பிரத்யட்சம்’ எனச்சொல்லி
மகிழ்ந்து நின்றால்!
எண்ணாது ‘ராஜ்யமெனப் பேசுகின்றீர்! ‘மாநிலத்’தை
ஏன்ம றந்தீர்?

‘ஆளுநரை’க் ‘கவர்ன’ரெனச் சொல்வதிலே அசையாத
ஆர்வம் கொண்டீர்!
மீளாதோ ‘மக்களவை’ எனுந்தமிழ்ச்சொல் ‘லோக்சபா’வை
மூழ்க டித்தே?
கேளாதோ உம்செவியில் ‘சட்டமன்றம்’ ‘அசம்ப்ளி’யெனக்
கிளத்தல் என்னே?
தேளாகப் பிறமொழிச்சொல் கொட்டுவதை யுணராது
திரிதல் நன்றே?

'மந்திரி'யென் றுரைத்தால்தான் மண்டையிலே உறைக்கிறதோ?
அமைச்ச ரென்றால்
வந்திடுமோ பெருங்கேடு? வகைகெட்ட தமிழ்நாட்டீர்!
மயக்கம் நீக்கிச்
செந்தமிழில் பேசுதற்குச் சிறுமுயற்சி செய்யீரோ?
சோம்பி வாயில்
வந்ததையே பேசுவதில் மகிழ்கின்றீர்! மறுமலர்ச்சி
வாய்த்தல் என்றோ?

'விவசாயம்' என்கின்றீர்! வேளாண்மை என்றுரைத்தால்
விளங்க வில்லை?
'புவியியலை' வடமொழியில் 'பூகோளம்' என்றால்தான்
புரியும் போலும்!
'அவமானம்' எனுஞ்சொல்லில் அருந்தமிழும் வடசொல்லும்
'அவியல்' செய்வீர்!
தவறின்றி 'மானக்கே' டென்றாலே புரியாத
தமிழர் போலும்!

'பாடையிலே போவீரோ 'படை'யென்று சொன்னாலே!
பதறு மாறு
தாடையிலே அறைந்தால்தான் 'இராணுவத்'தை விடுவீரோ?
தமிழ ரென்று
மேடையிலே பேசுவதால் பயனில்லை! மெய்யாகத்
தமிழின் மீது
கோடைமழை போலன்பு பொழியீரோ? தமிழ்பேசிக்
குளிரச் செய்யீர்?

பிறமொழியைக் காப்பதிலே தமிழனுக்கு நிகராகப்
பிறந்தார் யாரோ?
அறிவின்றித் தாய்மொழியைக் கெடுப்பதிலே அவனுக்கோ
நிகரே இல்லை!
குறிக்கோளே இல்லாத 'கோமாளி' வாழ்க்கையிலே
குட்டக் குட்டச்
சொறிநாய்போல் பதுங்குவதில் கைதேர்ந்து விட்டானே
தூ! தூ! கீழ்மை! O

"ஞாலம் கருதினும் கைகூடும்; காலம்
கருதி இடத்தான் செயின்". —குறள்.

தொல்காப்பியர் கழகம், தஞ்சாவூர்.

திருவள்ளுவராண்டு ஈராயிரம் நிறைவு விழா

அன்புடையீர் !

உலகப் பேரறிஞர் வரிசையில் முதற்கண் வைத்துப் போற்றத் தக்கவர் திருவள்ளுவர். அவர் முதல்நூல் கண்ட முனைவர்; மாபெரும் புலவர்; அரசியல் அறிஞர்; பொருளியல் வல்லுநர்; மெய்யறிவியல் மேலோர்; ஒப்புடைமை காண விழைந்த ஒள்ளியர்; சீர்திருத்தச் செம்மல்; அன்பின் ஊற்று; அருட்கடல்; அறிவுக்கு முதலிடம் தந்த அறவோர்; செந்தண்மை பூண்டொழுகிய செந்தமிழ்ச் சான்றோர்; நாடு, மொழி, சமயம், காலங்களைக் கடந்தவர்; உலகப் பொதுமறை அருளிய உயர்ந்தோர் என உலகோரால் பலபடப் பாராட்டப் பெறுபவர் என்பது தாங்கள் அறிந்ததே.

உலகில் முப்பதுக்கு மேற்பட்ட மொழிகளில் போப்பையர் முதலிய மூதறிஞர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ள உலகப் பொது நூல்-பேரறநூல் அறிவுக் கருவூலமாகிய திருக்குறளே என்பது வெள்ளிடை மலே. இத்தகைய பெறுதற்கரிய மாபெரும் பொது நூலே இயற்றிய திருவள்ளுவருக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் அவர்தம் திருப்பெயரால் வழங்கப் பெறும் ஆண்டே திருவள்ளுவராண்டு. ஏறத் தாழ முப்பதாண்டுகளுக்கு முன் சென்னேயில் தமிழ்க் கடல் மறைமலே யடிகளார் தலேமையில் கூடிய ''திருவள்ளுவர் நினேவு மாநாட்டில்'' திருவள்ளுவர் பிறப்பு கிறித்துவுக்கு 31 ஆண்டுகட்கு முந்தியது என அறுதி செய்யப் பெற்றது. அது முதல் திருவள்ளுவராண்டு பலராலும் பின்பற்றப்படுகிறது என்பதனேத் தாங்கள் அறிவீர்கள்.

இப்போது, 1998 நடைபெறுகின்றது. இன்னும் இரண்டாண்டு களில் (1969 சனவரியில் தைத் திங்கள் முதல் நாளில் பொங்கலன்று) ஈராயிரம் நிறைவு பெற உள்ளது. இதனே ஒரு மாபெரும் விழாவாக நடத்துவது நம் கடமையாகும்.

வேண்டுகோள்.

உலகுக்கு இன்றைய சூழ்நிலேயில் மிக இன்றியமையாத உயரிய கொள்கைகளே வகுத்து வழங்கியுள்ள வள்ளுவர் பெருமானுரின் ஈரா யிரம் நிறைவு விழா, உலகம் முழுவதும் வள்ளுவம் பரப்பும் பயன் மிக்க பெரு நிகழ்ச்சியாக நடைபெற வேண்டும். இதற்குரிய திட்டங் களேத் தீட்ட, தமிழக அரசும் இந்திய அரசும் அனேத்து நாட்டுக் கழகமும் (ஐ. நா. அவையும்) இந்திய, தமிழகச் சட்டமன்ற உறுப்பி னர்களும், தமிழ்ப் பெரியார்களும், எழுத்தாளர், பாவலர், கலேஞர், இளேஞர், மாணவர் மாணவியர் முதலிய அனேவரும் ஒன்ருக நின்று ஒத்துழைத்து ஆவனசெய்யத் தொல்காப்பியர் கழகச் சார்பாகப் பெரிதும் வேண்டுகின்ருேம்.

தமிழக அரசு, இந்திய அரசின் சிறப்புப் பொருளுதவி, ஒத் துழைப்புடன் அனேத்து நாட்டுக் கழகத்தின் (உனெசுகோ) பொரு ளுதவியைப் பெறவும் வெளிநாடுகளிலுள்ள இந்தியப்பன்னரகங்களின் வாயிலாகப் பல நாடுகளிலும் வள்ளுவர் விழா நன்கு நடைபெறவும் விரைவில் ஆவன செய்ய வேண்டுகின்ருேம். அன்றியும் தமிழகத்தில் சீரிய முறையில் விழா நடைபெறவும் திட்டமிட வேண்டுகின்ருேம்.

ஈராயிரம் நிறைவுவிழாப் பணித்திட்டங்கள்

(அ) திருக்குறளை மேலும் பல மொழிகளில் மொழி பெயர்த்தலும் பெரிய மொழிகளில் மலிவுப் பதிப்புகள் வெளியிடுதலும் செய்தல். ஆராய்ச்சி நூல்கள் வெளிவரவும் நினைவுச் சொற்பொழிவுகள் நிகழவும் திருக்குறள் பற்றிய தொகுப்பு நூல் வெளிவரவும் வழிவகை காணல். திருவள்ளுவர் பெயரால் உலகப் பரிசு ஒன்று வழங்கல்.

(ஆ) திருக்குறள் பரப்பும் பணிகளைச் செய்ய நிலையான நிறுவனமாகத் "திருக்குறள் நற்பணிக் கழகம்" ஒன்றினைத் தமிழகத்தில் நிறுவுதல். திருக்குறளை இந்திய தேசிய நூலாக்குதல். உலகம் முழுவதும் உள்ள பல்கலைக் கழகத் தமிழ் மாணவர் ஒவ்வொருவருக்கும் ஓர் அன்பளிப்புத் "திருக்குறள் தெளிவுரை" வழங்குதல்.

(இ) திருவள்ளுவர் பெயரால் பெரிய நினைவு மன்றங்கள், கல்வி நிலையங்கள், பல்கலைக் கழகங்கள் நிறுவுதல். ஈராயிரம் நிறைவு நினைவு அஞ்சல் தலை வெளியிட ஆவன செய்தல். இந்தியப் பாராளு மன்ற எல்லையிலும் தமிழக அரசுத் தலைமைச் செயலகத்திலும் திருவள்ளுவர் படிமம்(உருவச்சிலை) நிறுவுதல், திருக்குறள் பொருட்காட்சி நிலையம் அமைத்தல், தமிழகத்தின் பெரிய நகரங்களில் திருவள்ளுவர் படிமம்(உருவச்சிலை) நிறுவுதல்.

(ஈ) ஈராயிரம் நிறைவு நினைவாக உலகத் தமிழர் மாநாடு, உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, உலகத் திருக்குறளாராய்ச்சி மாநாடு ஆகிய முப்பெரும் மாநாடுகள் தமிழகத்தில் நடைபெற ஆவன செய்தல்.

தமிழ் நிறுவனங்களுக்குத் தனி வேண்டுகோள்:

உலகின் பல பகுதிகளிலும் அமைந்துள்ள தமிழ்க் கழகங்கள், மன்றங்கள், பேரவைகள் முதலியன இந் நிறைவு நிகழ்ச்சியினைத் தனிச்சிறப்புப் பொது விழாவாகவும், திருக்குறள் விழாவாகவும் பயன் மிக்க தமிழ்ப்பெரு விழாவாகவும் கொண்டாட வேண்டுகின்றோம்.

இந்தியாவின் பல பகுதிகளிலும் இயங்கிவரும் தமிழ் நிறுவனங்கள் இது குறித்து ஆராய்ந்து திட்டமிட ஒன்று சேர்வது மிகமிக இன்றியமையாதது. இந் நல்வாய்ப்பின் போது, "இந்தியத் தமிழ் (வளர்ச்சி) நிறுவன ஒன்றியம்" என்னும் பெயரில் ஓரிணைப்பு நிறு

வனம் உருவாகவும் உதவ வேண்டுகின்றோம். இதுநாள் வரை இத் தகைய நிறுவனம் உருவாகவில்லை. 1967 சூன் தொடக்கத்தில் தமிழ் நிறுவனச் சார்பாளர்கள் (தலைவர், செயலாளர்கள்) கூட்டத்தைத் தஞ்சையில் நடத்தத் தொல்காப்பியர் கழகம் பெரிதும் விழைகின்றது. இது குறித்துத் தொடர்பு கொள்ளவும், கருத்தறிவிக்கவும், ஒத் துழைக்கவும் வேண்டுகின்றோம்.

இதனைக் கண்ணுறும் தமிழ் நிறுவனத்தார், தமிழன்பர்கள் ஆகி யோர் தமக்குத் தெரிந்த பிற நிறுவனங்களையும் அறிமுகப்படுத்தி வைக்கவும் தொடர்பு கொள்ளச் செய்யவும் வேண்டுகின்றோம்,

முடிப்புரை:

ஈராயிரம் நிறைவு. திருவள்ளுவரையும் அவர்தம் பெரும் நூலை யும், தமிழரையும், இந்தியரையும், தமிழையும் உலகறியச் செய்ய இருபதாம் நூற்றாண்டில் நமக்கு வாய்த்துள்ள பெறுதற்கரிய நல் வாய்ப்பு என்பதனை உணர்ந்து அனைவரும் ஒன்றாகி, ஆவன செய்ய வும் எங்களுக்கு ஊக்கமூட்டி உதவி அருளவும் பணிவன்புடன் வேண்டி முடிக்கின்றோம். நன்றி. வணக்கம்.

"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே". —தொல்காப்பியம்.

இங்ஙனம், தங்களன்புள்ள,

தொல்காப்பியர் கழகத்தார்.

குறிப்பு:- இவ்வேண்டுகோள் மைய அரசு அமைச்சர்கள், தமிழக அமைச்சர்கள், அனைத்துக்கட்சித் தலைவர்கள், தமிழறிஞர்கள், தமிழ் நிறுவனங்கள், தமிழக மடங்கள், அயல் நாட்டுப்பன்ன (தூத)ரகங்கள், பல்கலைக் கழகங்கள், செய்தித் தாள்கள், தமிழன்பர்கள் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:—

புலவர்: தி. பாலசுப்பிரமணியன், செயலாளர்,
தொல்காப்பியர் கழகம்,
2442, தெற்குப் பெருந்தெரு, : : தஞ்சாவூர்-1.
தொலைபேசி எண்: 165.

o

—புலவர். தி. நா. அறிவுஒளி—

பொது வாழ்வறம் !

நாட்டுத் தலைமை நனியேற்ற நல்லோரே
கேட்டுக்குக் கேளிராய்க் கீழாதல் – பூட்டே
திருட்டுத் துணையாதற் போலாகும்; தீமை
மருட்டோட்டி வாழ்வதே மாண்பு.

ஆளுக்குத் தக்கபடி அஞ்சியுண்மை தான்மறைத்துக்
கோளுக்கு மாறாகக் கூத்தாடித் – தாளுக்குக்
கும்பிட்டுத் தாழ்பரத்தைக் கூன்வாழ்க்கை வாழ்தலினும்
தம்பியே ! சாதலறச் சால்பு !

மேடையிற் பொய்யுரைத்து மேன்மை யரசியலில்
கோடை யிடியாய்க் குழப்புவார் – தாடையைக்
கொன்று தருக்கைக் குறுக்கலே மாந்தரின்
இன்னறம் ஆகும் ! எழு !

நாட்டுக்கு நாடு நனிபகைமை நாட்டுவது
கேட்டுக்குள் கேடுதரும் கேளிரென – வீட்டுறவை
நாட்டிடுவோம் ! நல்லன்பால் பூங்குன்றன் நல்லறத்தை
வேட்டின்பம் வாழ்வோம் விழைந்து.

அச்சுக் கலையால் அரும்பொய்யை விற்கின்றார்
நச்சுப் பயிர்வளர்க்கும் நஞ்சனையார் – அச்சத்தால்
அத்தகைய பொய்மை யழித்தொழிக்க நல்லறிஞர்
ஒத்துழைக்க முன்வருக ஓர்ந்து.

வாழ்வுக் குதவா வளவளப்புப் பொய்க்கதைகள்
தாழ்வுக் குழியாமே! தாளிகைகள் – பாழ்வளர்க்க
வீண் செய்தி நல்கும்; விரியறிவுப் பண்பருளல்
ஆண்மை யிலக்கிய மாம்!

"இவர்தலைவர் வாழி!'; 'இவர் தொண்டர்" என்பார்–
இவர்புலையர் ஈங்குப்பொய் ஈந்தார் – அவர்தொலைக!
ஆள்வோரும் ஆளப் படுவோரும் அற்றநிலை
கேள் போ லுறவளிக்கும் கீண்டு.

பகையற்ற நல்லரசும் பண்புள்ள நாடும்
படையற்ற ஆண்மையும் பாரில் – கொடையற்ற
வாழ்வும் குறிக்கோளும் மாணறிவும் பெற்றாரே
தாழ்வற்ற வாழ்வுற்றார் சால்பு!

கட்சிப் பிணக்கின்றிக் கண்ணோட்டம் போற்றிமக்கள்
உட்பகை யோம்பா துதவிசெய்தே – நுட்பக்
கருத்துறழ் பாட்டுக் கிடந்தந்து நட்பாய்ப்
பொறுத்துயர்தல் சேர்க்கும் புகழ்!

மடமைகள் வீழ மனச்செம்மை வாழக்
கடமைகள் போற்றிக் களிப்பீர்! – உடைமைகள்
எல்லார்க்கும் நன்றருள இன்புற்று வாழுமுறை
நல்லார் நயந்த நெறி. O

தமிழ்ச்சிட்டு

O "தமிழ்ச்சிட்டு,, உங்கள் குழந்தைகளை நோக்கிப் பறந்துவர உருபா. இரண்டு உடனே அனுப்பி உறுப்பினராக்குங்கள்.

தமிழ்ச்சிட்டு கடலூர்–1.

மறைந்துவரும் தமிழ்ச் சொற்கள்.

சோம்பல், அடிமை, அறியாமை யால்தமிழை
ஓம்பல் குறைவால் உலகவழக் கற்றொழிந்த
பைந்தமிழ்ச் சொற்கள் பலகோடி! ஈங்கதனால்
நைந்த தமிழர் நலிவு பலகோடி!
இன்று விழித்தோம்; இனியேனும் செந்தமிழை
நன்றாகப் பேணிவர நாம் முனைவோம்; நாற்புறமும்
சென்று மறைந்து வரும் செந்தமிழ்சேர் சொற்களை
ஒன்று திரட்டி, உரியபொருள் ஆய்ந்தெழுதி
இப்பகுதிக் கேவிடுக்க; ஏற்ற பயின்றிடுக;
செப்பம் மொழிக்குச் சிறப்பு.

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்:
புலவர். தி. நா. அறிவுஒளி, திண்டிவனம்.

மரபுத்தொடர்கள்.

பால் மாறல்—சோம்பரடைதல். **முத்தாய்ப்பு**—முடிவு.
முண்டு கலப்பை—எதற்கும் பயனற்றவன்.
இளுப்புதல்(இளுப்பாதே)—குழப்புதல்.
நாவில் தேன் தடவுதல்—ஏமாற்றுப் பேச்சால் ஏய்த்தல்.
பாட்டை—வழி.
தடம் மிதித்தல்—ஒருவன் சென்றவழியைப் பின்தொடரல்.
நோட்டம் விடல்—எட்டினமட்டும் பார்த்தல்.
சட்டகம் பேசல்—விரிவான வடிவை விளக்கிப் பேசல்.
சம்பங்குடை—சிற்றூரினர் ஓலையால் மழைக்கெனச் செய்யும் குடை.
தாளம் போடல்—தவித்தல், ஒத்துப்பேசுதல்.
ஆமாம் போடல்—வழிவழி மொழிதல்.
வால்பிடித்தல்—ஒருவரைக் கண்மூடிப் பின்பற்றல்.
குழையடித்தல்(குழைகடித்தல்?)—இரண்டகமாகப் புகழ்தல்.
வாக்கு எடுத்தல்—தலைவகிடு பிரித்தல்.
பிள்ளையாண்டான்—மகனைத் தாயர் முதலிய முதுமகளிர் அழைக்குஞ் சொல்.
கூட்டாஞ்சோறு—பல்வகை ஒவிய உணவுகள்.
அலகிடுதல்—தெருப் பெருக்கல். **கருவறுத்தல்**—வேரோடு அழித்தல்.
சீர் வரிசை—மணமகளுக்குச் செய்யும் சிறப்பு; பரிசில். **தாவு**—இடம்.

நையப் பாட்டு பாடல்-நயப்பாட்டுப் பாடல்.
கீழ்வெட்டுப்பேச்சு-பிறரை எள்ளி இகழும் பேச்சு.
கொட்டம்-அரட்டை அடித்துக் கும்மாளமிடுதல்.
தப்படி-ஒரு காலை இயல்பாக எடுத்து வைக்கும் தொலைவின் அளவு.
கை நீளமாயிற்று-களவாடினான்.
ஆண்டுமாறல்-பயன்படுத்தி விட்டுவிடல்.
ஆகிவந்தது-பயன்படுத்தி வெற்றி பெற்றவை.
ஆறப்போடுதல்-காலங்கடத்துதல். பெறுமானம்-மதிப்பு.
வல்லிசு-முழுமையாக. போக்கிலி-தீயவன், போக்கற்றவன்.
பூசார்த்தி(பூசாரி)-பூ கட்டுவோர், சங்கு ஊதுபவர்.
குட்டுப்படல்-பயிற்சியடைவில் அறிதல்.
பழங்கலம்-பழமையான பானை முதலிய கலங்கள்.
மென்னி-கழுத்து, குரல்வளை.
குறிப்படாது-ஒழுங்குபடாது; முறையாக அமையாது.
தோராயம்-ஏறத்தாழ. (கூடக்குறைய) (ஏறஇறங்க)
வயிற்றில் பல்லுடையவன்-ஏமாற்றமுடியாத பேர்வழி.
மொத்து(மத்து)-அறிவில்லாத தன்மை.
தலைகாய்ந்தவன்-ஏதிலன்; களைகண்ணில்லாதவன்.
காலாடி-கயவன்.
வெற்றுவேட்டு-பயனின்றி 'வாய்வளப்பம்' பேசுபவன்.
விடியாமுஞ்சி(முகம்)-மங்கலமற்ற முகத்தினன்.
வெட்டிப்போது(வெட்டிப்பையல்)-வீண்நேரப்போக்கு.
மட்டித்தனம்-அறியாமை. கடுசு-கெட்டியானது; இறுக்கமானது.
மாராயம்-இறப்பு முதலிய செய்திகூறிப் பணம் பெறல்.
ஓமல்-பொறுமையால் பேசப்படும் அலர்.
சில்லுண்டித்(வேலை)தனம்-குறும்புத் தீமைகள்.
படுவா(ன்)-அழிந்து போகக் கூடிய தீயவன்.
நோஞ்சான்(நொய்ந்தான்)-மெலிந்த வலிமையற்றவன்.
கிறி-பித்தன்; வெறிப்போக்கு. பத்தை-துணுக்கு(துண்டு).
முட்டாக்கு-தலையை மூடும் துணி.
காலாழி(மெட்டி)-கால்விரலில் மகளிர் அணியும் வெள்ளியாழி.
கலுழுதல்-பாழ்படல். மனப்பால்-கற்பனை.
குடுவை-சிறுவட்டமான மண்பானை.
கச்சிகை-நாகசுரத்தின் 'இலை'யினுள் தூசுபோக்கும் ஊசி.

பின்வரும் சொற்களைத் தொகுத்தனுப்பியவர்,
ந. முத்துக்குமரன், அறி. இ., ஆ. ப. குளத்துப்பாளையம்,
சுல்தான்பேட்டை (அஞ்) பல்லடம், கோவை மா.வ.

அம்பிலி-கூழ்(குறுமா). அட்டாலி-வீட்டிலுள்ள பரண்.
ஆசு-பதப்படுத்திய தோல்.
ஆசாரம்-வீட்டின் தலைமைப் பகுதி, முற்றத்திற்கடுத்த மண்டபம்.
இட்டேரி-காடுகளுக்கிடையே நடப்பதற்காக இடப்பட்ட ஏரி.
இலங்குதல்(இலக்கம்)-பழகுதல், இசைதல்.
உத்தி-தோட்டங்களில் நடப்பதற்கு இடப்படும் பெரிய வரப்பு; பெரும்பாலும் அருகம்புல் இருக்கும்.
எகத்தாளம்-திமிர், பரிகாசம்.
ஓர்சல்-(சச்சரவு, வழக்கு) இணக்கமாதல், (கடன்)தீர்த்தல், நிலவரப்படுத்துதல் (Settle). கதனை-வெடி.
கரிசனம்-அன்பு, சிரத்தை. கங்கு-வரம்பு, எல்லை, விளிம்பு.
கதக்குதல்-குழந்தை கக்குதல். கடவு-வாயில் வழி, நுழைகதவு.
கால்செராய்-சல்லடம், கால்சட்டை. குண்டல்-வயல்.
கொங்காடை-மழைபெய்யும்பொது பெரிய கோணிப்பைகளை தோதாக மடித்து நனையாமல் போட்டுக் கொள்ளுதல்.
குந்தகம்-தீங்கு. குறை-மேய்ச்சலுக்காக விடப்பட்ட நிலம்.
கொந்தாளம்-கிணறு வெட்டப் பயன்படும் கோடாரி போன்ற ஏனம்.
கதுமை-கூர்மை. குசலம்-கோள் சொல்லுதல், பரிவாய்க் கேட்டல்.
கொட்டம்-சேட்டை, இறுமாப்பு நீர் அருந்த மறுக்கும் மாடுகளுக்கு நீர் வார்க்கும் மூங்கிலால் செய்யப்பட்ட படிபோன்ற ஏனம்.
சாடு-ஒருவகைக் கூடை. சல்லை-மெல்லிய மூங்கில். சூரி-பேனுக்கத்தி.
சூந்து-தீப்பந்தம்.
சொரை-வைத்தூற்றி, (Funnel)(சொருகி ஊற்றுதல் எனும் படி)
சங்கடை-குழந்தைகளுக்குப் பால் வார்க்கும் சங்கு.
தடயம்-Clue, குறிப்பு.
திரும்புகால்-வழி திருப்புகின்ற இடம்(Turning point)
தோது-உபாயம், விரகு.
நத்துதல்-விரும்புதல், ஆவலோடு காத்திருத்தல்.
நச்சரித்தல்-தொந்தரை, தொல்லை(Nuisance)
நலங்குதல்-(குழந்தைகள்) நோய்வாய்ப்படுதல்.
நங்கை-அண்ணி. நாம்புதல்-கையால் அள்ளுதல்.
நாம்பு-கைப்பிடியளவு.

(ெ)நப்பு-வளப்(குறிப்பாகப் பணவளம்)தேன் (Nector).
பதனம்-பாதுகாப்பு,(பத்திரம்). பகுடு-கீழ்த்தாடை.
பதம்-பக்குவமான ஈரம்.
பாடுவாசி–நடப்பட்ட நாற்றுக்களில் சில பட்டுப் போதல்.
பாடுவாசி பார்த்தல்–பட்டுப்போன நாற்றுகளுக்கு வேறு நாற்றுகளை நடுதல்.
பணிக்கம்-வெற்றிலை எச்சில் உமிழும் கலம். பிரவை-ஈனுத ஆடு.
பொங்கு–பறவைகளின் உடற் பகுதியிலுள்ள மெல்லிய இறகு.
பொசித்தல்-பறவையின் இறகுகளைப் பிடுங்கி நீக்குதல்.
பொத்தி-பொதுவான பொருள் அல்லது இடம்.
பாளம்-படிகம் (Crystals).
பண்ணுடி-பண்ணைத் தலைவன் (கணவன் என்ற பொருளிலும் வழங்கி வருகின்றது). பூட்டை–முதிராத கதிர்.
பட்டி-ஆடு அடையும் இடம்.
புணித்தல்–கால் நடைகள் நோய்வாய்ப்படுதல்.
பரும்படி-மேற்போக்கான, தோராயமான.
மப்பு-மயக்கம், போதை, மழைமூட்டம்.
மடைவாய்-கிணற்றிலிருந்து இறைக்கப்பட்ட நீர் முதலில் விழுந் [தொட்டி.
மூடம்–முகில் சூழ்ந்த வானம்.
முக்கு-பாதை வளைகின்ற இடம். மதியம்-பௌர்ணமி. முழுநிலா.
மச்கிரி–பெரிய கூடை. வெட்டாப்பு–மழை ஓய்ந்த இடைவேளை.
வேகடை-அறிவிலி. விணையம்-புத்தி கூர்மை, அறிவுடைமை.
வேடை-பஞ்சகாலம். விடுப்பு-இடைவேளை, சிறு ஓய்வு.
வெந்தண்டன்-மணமாகாதவன்(பிரம்மச்சாரி).

தொகுப்பும் வகுப்பும்: முகவை. ஆடவல்லான், எல். எம். ஈ.
துலக்கத் தொழில்வலன்
திரு. பாத்துளிப்பாய் குழும்புத் தனிப்பாட்டு வரையறுப்பு,
சென்னை-க.

அலங்கமலங்க அடித்தல்-நிலை குலையுமாறு செய்தல்.
துரவு-Estate.
அட்டாலப்பலகை–அடுக்களையில் உயரத்தில் பொருள்கள் வைப்பதற்கென இரண்டு கோடியில் இரண்டு மரச்சக்கைகளைச் சுவரில் அடித்து அதன்மேல் ஏற்றப்பட்ட நெடும் பலகை.
சள்ளைக்கடுப்பு-அலுப்பால் விளைந்த ஒருவகை மேல் வலி.

வேறென்ன சொல்வது?

* குடியரசுத் தலைவர் பதவிக்கு சாகிர் உசேன் தகுதியானவர். எல்லா அரசியல் கட்சிகளும் அவர் வெற்றியைப் போற்றிப் பாராட்டும் என்று நம்புகின்றேன்.
—தேர்தல் முடிவுக்குப்பின் அண்ணா.

'இந்த உண்மை தேர்தலுக்குப் பின்தான் எனக்குத் தெரிந்தது.'

* தமிழர்கள் கட்டுப்பாடு மிக்கவர்கள்! —சாக்ளா பாராட்டு.

அஃதாவது குடும்பக் கட்டுப்பாடு!

* போலி பங்கீட்டு அட்டைகளைக் கண்டுபிடிக்க உதவுங்கள்:
—அண்ணாத்துரை.

முதலில் அரசினரால் கொடுக்கப்பட்ட அட்டைகள் உண்மையா போலியா என்று கண்டுபிடியுங்கள்.

* எங்கள் குடும்பத்தில் எண்ணிக்கைக்கு மேல் கணக்குக் காட்டி என் மனைவி அரிசி பெற்றாள்! —அண்ணாத்துரை.

என் மனைவி என்பதால் நான் அவளை ஒன்றுஞ் செய்ய இயலவில்லை.

(முன்பக்கத் தொடர்ச்சி)

வயிற்றுளை, வயிற்றளைச்சல்-வயிறு அளைந்து அடிக்கடி மலம்கழித்தல்.

வயிற்றுப் போக்கு-Diarrhoca. கரட்டுக் கழிச்சல்-Dysentery.

படர்தாமரை-Ringworm. கம்புக்கோடு-Armpit, அக்குள்.

கவட்டை-Y—இவ்வடிவுடைய மரக்கொம்பு; 'கவடு' எனுஞ் சொல்லடிப் பிறந்தது.

திட்டிமுறைப்பாடு-உறவினர்க்குள் சண்டை, சச்சரவு கரணியத்தால் 'வாவு, சாவு' போகாமை.

வாங்காய்-ஒருவகை ஊது கருவி, நள்ளிரவில் ஊதப்படுவது. ஊர் காவலின்பாற்பட்டது.

வன்மம்-Enmity. சடம்பு-சணற் கயிறு. கல்நார்-Asbestos.

மசகு-வண்டியினச்சுக்கு உயவிட (Lubrication) உதவுவது. 'மசி'யினடிப் பிறந்தது.

அஞ்சுருவாணி-Centre bolt. அடைகல்-Anvil - பட்டை.

தமர்-Drill - தொலையிடுதல். மண்டிலம்-Mirror.

பந்தி-பலர் ஒருங்கமர்ந்து உண்ணல். (தொடரும்)

* *அன்றுதொட்டு இன்றுவரை கைத்தறிச் சிக்கல் தீராத சிக்கலே!*
—நெடுஞ்செழியன்.

அஃதாவது அதை நாங்கள் மட்டும் தீர்த்து விடுவோம் என்று நம்பிவிட வேண்டா.

* *ஒரே மாதத்தில் 3 இலக்கம் பெறுமானமுள்ள பதுக்கல் உணவுப் பொருள்கள் பிடிபட்டன!*
—தமிழகச் செய்தி.

பிடிபட்ட உணவுப் பொருள்கள் மீண்டும் எங்குப் பதுக்கப் பட்டனவோ?

* *வெற்றிபெற்ற பேராயக்கட்சி உறுப்பினர் (விஞயகம்-திருத்தணி) திருப்பதியில் மொட்டை!*
—செய்தி.

தன் வெற்றி தன் தலை மயிருக்குச் சமம் என்று அவர் கருதி யிருக்கலாம்.

* *அடுத்த தேர்தலில் பேராயக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றும்!*
—பக்தவத்சலம் நம்பிக்கை.

அடடே! 'பக்தவத்சலம்' இன்னும் இருக்கின்றரா?

* *திரையுலக வாழ்க்கை வெறுத்துவிட்டது.*
—கே. பி. சுந்தராம்பாள்.

இவ்வளவு காலமாகவா அதில் விருப்பம் இருந்தது.

* *சென்னையில் நூறுயிரம் உருபா மதிப்புள்ள மது பிடிபட்டது.*
—தினத் தந்தி.

பிடிபடுமுன் அதன் மதிப்பென்னவோ?

* *'தலைச் சுமை' இறங்கியது.* —தோல்விபற்றிப் பக்தவத்சலம்.

தலைச் சுமையா? தலைக்கனமா?

* *சொத்துகளை விற்றுவது பிள்ளைகளைப் படிக்க வையுங்கள்!*
—நெடுஞ்செழியன்.

அந்தப் படிப்பைக் கொண்டு மீண்டும் அதேசொத்துகளை வாங்கி விடலாம்!

* *வாணிகன் என்பவன் மிக்க நாணயமாக நடந்து கொள்ள வேண்டும். வாணிகத்தில் சூது இருந்தாலும் அது பிறருக்குத் தெரியக் கூடாது.*
—வாணிக நிலையத் திறப்பு விழாவில் பெரியார் அறிவுரை.

அவருடைய 'நாணயம்' என்பது அதுவாகத்தான் இருக்குமோ?

* *உ. பி.யில் மருத்துவமனை இருட்டறையில் மருந்துகள் பதுக்கல். மாநில அமைச்சர் கண்டு பிடித்தார். —இலட்சுமணபுரிச் செய்தி*

இதிலென்ன வியப்பு? இங்கு உள்ள மருத்துவர்கள் வெளிச்சம் உள்ள அறையிலேயே பதுக்குகின்றனரே?

* *அரசு எங்கள் கையில் இருப்பதால் இந்தி நுழைப்பு ஒழிந்துவிடும் என்று நாங்கள் கருதவில்லை. நடுவணரசின் குரல் மாறியிருக்கிறது. இது கூஎ - தேர்தல் முடிவின் சிறப்பு!*

—கோடைக்கானல் மாநாட்டில் சட்ட அமைச்சர் மாதவன்.

அரசியல் மாற்றம் வெறும் குரல் மாற்றமே; செய்தி மாற்றமன்று என்பதைக் குறிப்பாக உணர்த்துகின்றாரா அமைச்சர்?

* *மதுரை எழுத்தாளர் மன்றத்தின் எட்டாம் ஆண்டு விழாவில் சுரதா தலைமையில் பாட்டரங்கம் நடைபெறும். பாடல்களை ஒலி பரப்புமாறு திருச்சி வானொலி நிலையத்தார் வேண்டிக்கொள்ளப் பட்டுள்ளனர். —செய்தி.*

ஊமையர்களுக்கு உளறுவாயன் சொற்பொழிவாளன்! உதவிக்குத் திக்குவாயன்!

* *(1) திருவள்ளுவரின் மறுபிறப்பு அறிஞர் அண்ணா என்றால் மிகை யாகாது. (2) திருவள்ளுவர் காட்டிய வழியில்தான் இன்றைய அரசு நடந்து வருகின்றது. (3) முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களை நடமாடும் திருவள்ளுவர் என்று சொல்லலாம்.*

—காஞ்சிபுரம் பள்ளி ஆண்டு விழாவில்
அமைச்சர் முத்துசாமி உளறல்.

1 ஒருவேளை திருக்குறளின் மறுபதிப்புகள் தாமோ, அவர் எழுதிய 'கம்பரசமும்' 'உரோமாபுரி ராணிகளும்' பிற நூல் களும்.

2 திருக்குறளுக்கும் திருவள்ளுவர்க்கும் பெருத்த இழுக்கு.

3 ஊமை ஊரைக் கெடுக்கும்! உளறல் பெயரைக் கெடுக்கும்!

* *அண்ணாத்துரைக்கு வெள்ளியால் செய்த படி பரிசு*

—சென்னைச் செய்தி.

வெள்ளிப் படியில் பொன் அரிசியை அளந்து கொடுத்திருக்கலாமே!

O

(2-ஆம் அட்டைப் பக்கத் தொடர்ச்சி)

யெல்லாம் தமிழாய் இருக்கும்படி பார்த்துக் கொள்வது தங்கள் பொறுப்பு. மொழிபெயர்ப்பும் நூலாசிரியமும் இனிமை பயக்கின்றன.

—பெ. மணியரசன், ஆச்சாம்பட்டி (அஞ்) தஞ்சை மாவட்டம்.

O அன்புடையீர்!

"பெரியாரின் தமிழ் ஆராய்ச்சி" பற்றிக் கண்டனம் தெரிவித்து எழுதியதன் மூலம், அவர்தம் தொண்டர்களாகிய எம்போன்ற ஆயிரமாயிரம் தோழர்களின் மனத்தைப் புண்படுத்தி விட்டீர்கள். உண்மையில் தாங்கள் கூறிய சொற்களை இப்பொழுது வெற்றிபெற்று ஆளுங் கட்சியாக வந்துள்ள அரசியல் தலைவர்கள் இருக்கும் இரங்கத்தக்க நிலைமையைப் பார்த்துச் சொல்ல நினைத்துத் தவறிப்போய் அய்யாவைச் சொல்லிவிட்டீர்களோ என்று ஐயுறுகின்றேன். ஏனென்றால் தாங்கள் எழுதிய 'ஒப்போலை யாருக்கு?' என்ற ஆசிரியவுரை நேர்மையாகவும், வழி தெரியாமல் தடுமாறியவர்களுக்கு வழிகாட்டியாகவும் அமைந்திருந்தது. ஆனால் அய்யாவைப் பற்றி எழுதிய கட்டுரையில் மூளைக்குழப்பம் யாருக்கு என்பது தெரியவில்லை. இராசாசியின் நரித்தன்மையுடன் ஐயா அவர்களின் கள்ளங் கவடற்ற தன்மையைஎப்படி இணைத்தீர்களோ தெரியவில்லை. இராசாசியின் தமிழ்ப்பற்று தமிழை அழிக்கக் கூடியது. ஐயா அவர்களின் தமிழ்வெறுப்பு தமிழின் வளத்தையும் சிறப்பையும் எடுத்துக்காட்ட வல்லது.மொழிபற்றிய ஐயாவின் கருத்து, அறுவை மருத்துவரின், கருத்தைப் போன்றது.

—சாமி. கங்காதரன். இலாசன்சு பாதை. திருச்சி–1.

O கடந்த இதழ்களின் ஆசிரியவுரைகளைப் படித்து வியப்பும் திகைப்பும் அடைந்தேன். அவற்றில் திரு. காமராசருக்கும் அவர் சார்ந்துள்ள பேராயக் கட்சிக்கும் துணை போவது போல் எழுதியுள்ளீர்கள். இப்படிப்பட்ட இழிநிலை தங்களுக்கு ஏற்பட்டது கண்டு மிகவும் நாணுகின்றேன். தென்மொழியின் குரல் மாறுபட்டு ஒலிக்கத் தொடங்குகின்றது ...... பக்தவத்சலம் தோற்கடிக்கப் பட்டதில் மகிழ்ச்சி; காமராசர் தோற்கடிக்கப் பட்டதில் தங்களுக்கு வருத்தம். இஃது எந்த வகை அரசியல் என்று எமக்குப் புரியவில்லை. தாங்கள் முன்பு தமிழின் அருமை பற்றி விரித்தெழுதிய பொழுதெல்லாம் நெஞ்சம் மலர்ந்தேன். தமிழனுடைய பெருமைகளைப் பற்றியெல்லாம் கூறிய பொழுது தலைக்கிறுக்கு கொண்டேன். "குமரி முனையின் கடற்கரை மணலில் நம் கால்கள் தோய்ந்துள்ளன. பனிமலையின் கொடு முடியில் நம் பெருவிரல்கள் பதிந்திருக்கின்றன. கிழக்குக் கடற்கரையின் மீன்களை மேற்குக் கடற்கரையின் மணலில் உலர்த்தியிருக்கின்றோம்." என்று எழுதிய பொழுதெல்லாம் நெஞ்சம் பூரித்தேன். ஆனால் இன்று ... ...

—கொ. திருமால்.பி ஏ. கருத்தய்யா புரம். கோவில்பட்டி(வட்)

இரண்டாவது இதழ் 10-6-67-இல் வந்துள்ளது.

பாவேந்தரின் புதிய பாடல்களோடு
நாடகம்-உரைநடை
முதலியன படைக்கிறது.

"பாரதிதாசன் குயில்"

திங்கள் இதழ்:

ஆசிரியர்: மன்னர் மன்னன்.

பாவேந்தர் வாழ்வின் சுவையான நிகழ்ச்சிகளை
'நினைவு மண்டபம்'
கட்டுரைத் தொடரில் படியுங்கள்.

தனி இதழ் 75 காசு.

உறுப்பினர் ஆண்டுக் கட்டணம் உருபா: 10.00.

பாரதிதாசன் குயில் – புதுச்சேரி-1.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.